# கத்தோலிக்க அரசியல் கட்சி எதுவும் இல்லை


Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

மலர் 12
இதழ்: 54
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன்: 389

யாழ்ப்பாணம் பங்குனி 23 முஹர்றம் 27 ஞாயிற்றுக்கிழமை [5-4-70]



### தேவை

ரெக்ஸ்ரைல்ஸ் தொழிற்சாலைக்கு ரெக்ஸ்ரைல் மாதிரிப்படங்கள், ஹான்ட் ஸ்கிரீன், பிறின்ஸ் இருட்டறை, வேலை சாயம் போடுதல் ஆகிய வேலைகளுக்கு அனுபவமுள்ள இரு பாலாரும் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்.

இராஜரெத்தினம் தொழிற்சாலை
உடையார் வீடு, லோட்டன் ரேட்.
மானிப்பாய். 2019


## நெல் உற்பத்தி 7 லட்சத்தால் அதிகரிப்பு

கோட்டை, வெள்ளி

கடந்த மூன்று மாதத்திலும் இலங்கையில் அறுவடை செய்யப்பட்ட நெல் சென்ற ஆண்டிலும் பார்க்க 7 லட்சம் புசலினல் அதிகரித்துள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த பத்து வருடத்திலும் பார்க்க இவ் வருடம் 4 மடங்கு அதிகமான நெல் விளைந்துள்ளதாகவும் நெல்விளைச்சலில் அனுராதபுர மாவட்டமே முதல் இடத்தைப் பெற்றுள்ளதென்றும் அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு, சனி

உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கத்தோலிக்க அரசியற்கட்சி எதுவுமே நாட்டில் இல்லையென்றும் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் உள்ள கத்தோலிக்கர்கள் அவரவர்கள் மனச்சாட்சியின்படி வாக்களிக்க முழுச் சுதந்திரம் உண்டென்றும் கொழும்பு மேற்றிராணியார் அலுவலகத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் ஈழநாடு நிருபரிடம் தெரிவித்தார்.

நாட்டின் சில பாகங்களில் சிலர் கத்தோலிக்கர்களின் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் என்று கூறி செல்வாக்குப் பெற முயல்வதாகவும் இது பற்றி பத்திரிகைகளில் கூட செய்திகள் வந்ததாகவும் தெரிவித்த அந்தப் பிரமுகர் இம்மாதிரியான நபர்களுக்கும் அவர்களின் கட்சிகளுக்கும் கத்தோலிக்க திருச்சபைக்கும் உத்தியோகபூர்வமாக எந்தவித சம்பந்தமும் இல்லையென்றும் வலியுறுத்தினர். (சி பி ஏ)

தேர்தல் பிரசாரத்திற்கு

## அரச விமானங்களை பிரதமர் பயன் படுத்தமாட்டார்

கொழும்பு, சனி

பொதுத்தேர்தல் பிரசாரத்துக்கு பிரதமர் அரச விமானப்படை விமானங்களையோ, அன்றி ஹெலிஹொப்டர்களையோ பயன்படுத்த மாட்டார். இந்தத்தகவலை அவர் இன்று பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில், பிரதமர் டட்லி அரசாங்கத்துக்குச் சொந்தமான விமானங்களை உபயோகிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

பிரதமர் கடந்த 5 நாட்களும் வெளியிடங்களில்தேர்தல் பிரசாரம்செய்துவிட்டு, இன்று கொழும்பு திரும்பினர்.

## தபாற்கந்தோர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 21ம் திகதி முதல் சங்கானை உப தபால் கந்தோர் யாழ்ப்பாணம் பொன்னலை வீதியில் பழைய காரியாதிகாரி காரியாலயம் இருந்த இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

### பஜனை

நல்லூர் நாயன்மார்கட்டு குளத்தடிப் பிள்ளையார் கோவிலில் நாளை யாழ். சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரின் திருமுறை பஜனை நடைபெறவிருக்கின்றது.

# 7 முன்னாள் எம்.பி.க்கள் உட்பட 67 பேர் தேர்தலில் ஈடுபட இயலாது

## "மூன்று எதிரிகளும் ஆயுதங்களால் தாக்கினர்"

வல்வெட்டித்துறை, சனி

'கொடிகாமத்திலிருந்து வேலைமுடிந்து வீட்டிற்கு வந்தசமயம் எதிரிகள் மூவரும் என்னைத் தாக்கினர். முதலாவதாக, முதலாம் எதிரி ஓடிவந்து கம்பியால் அடிக்க அதைத் தொடர்ந்து 2-ம், 3-ம் எதிரிகளும் ஆயுதங்களால் என்னைத் தாக்கினர் நான் சத்தம் போட்டேன். ஆட்கள்வந்து விட்டனர். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். பொலிசாருக்கும் வாக்குமூலமளித்தேன்' என்று துன்னாலை தெற்கைச் சேர்ந்த தொழிலாளியான பாலன் சின்னத்துரை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில்

இவ்வழக்கு துன்னாலை தெற்கைச் சேர்ந்த ந. திரவியம், பா. சின்னத்தம்பி, து. தனம் ஆகிய மூவரும் கடந்த வருடம் மார்கழி மாதம் 8-ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த பா. சின்னத்துரையை ஆயுதங்களால் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் 3-ம் எதிரியை விடுதலைசெய்து 1-ம், 2-ம் எதிரிகளைக் குற்றவாளியாகக்கண்டு எதிரிகளை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு, தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 11-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## புனித நீற்று திருநாள்

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை புனித நீற்று திருநாளுக்கான நவ நாட்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இளவாலை உதவிக்கட்டளைக் குரவர் வண ஜோசப் ஆராதனைகளை நடாத்தி வருகிறார் தினமும் காலையில் திவ்விய பூசையும் மாலையில் நற்கருணை ஆசீர்வாதம் செபமாலை பிரசங்கம் என்பனவும் நடைபெற்று வருகின்றன. சனிக்கிழமை மாலை வேஸ்பர் ஆராதனையும் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநாட் பூசை சுற்றுப்பிரகாரம் என்பவற்றுடன் திருநாள் முடிவுறும்

— —

## யாருடைய கூப்பன்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

குருநகர் டேவிட் ரேட்

## புதிய தேர்தல் சட்டத்தின் விளைவு

கொழும்பு, சனி

ஏழு முன்னை நாள் எம்.பி கள் உட்பட மொத்தம் 67 நபர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்காளர்களாகவோ, வேட்பாளர்களாகவோ பங்குகொள்ளத் தேர்தல் சட்டப்படி அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஏழு முன்னைநாள் எம்.பி.கள் உட்பட இந்த அறுபத்தேழு நபர்களும் தேர்தல் வழக்கு விசாரணைகளின் போது, தேர்தல் சட்டங்களின் கீழ் சட்ட விரோத அல்லது ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்[...]ர்களாவர்.

புதிய [...]தேர்தல் சட்டத்தின் கீழ், சட்டவிரோத அல்லது ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்று நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் ஏழு

தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### முன்நாள் எம்.பி.க்கள் பெயர் விபரம்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வாக்காளர்களாகவோ, வேட்பாளர்களாகவோ பங்குகொள்ளாவண்ணம் சட்டப்படி தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முன்னைநாள் ஏழு எம். பி.க்களின் பெயர் விபரம் வருமாறு:

திரு. அனில் முனசிங்கா (அகலவத்தை), திரு. ஆர். டி. சமரநாயக்கா (பெந்தர எல்பிட்டியா), திரு. கிளிபர்ட் ரத்வத்தை (பலாங்கொடை), திரு. ஆர். ஆர். டபிள்யு. ராஜபக்ஸ (தொடங்கஸ்லாந்தை) திரு. டி. எஸ். சமரசிங்கா (கொலன்னவ). திரு. டி. எச். வில்லியம் சிங்கோ

ஆட்சேப மனு தாக்கல்செய்யப்பட்டு, அவர்களுடைய தேர்தல் செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### சட்டதிருத்தம் ஏன் வந்தது

பழைய தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் நீதிமன்றத்தால் சட்டவிரோத அல்லது ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் கூட ஏழு ஆண்டுகாலஎல்லைக்குள் மீண்டும் வேட்பாளராக நின்று தேர்தலில் போட்டியிட, வழியிருந்தது.

சட்டத்திலிருந்த இந்தக் குறைபாட்டைப் பயன்படுத்தியே தேர்தல் நீதிமன்றத்தின் தீர்ப்பின் விளைவாக தேர்தல்செல்லாமற் போனவும் வெலிமடைத் தொகு

சிறுபொருள் ஏற்றுமதி மூலம்

## இலங்கைக்கு ரூ. 16 கோடி வருமானம்

கோட்டை, சனி

சிறு பொருள்களின் ஏற்றுமதி மூலம் இலங்கை கடந்த வருடம் 16 கோடி ரூபாவைச் சம்பாதித்துள்ளது.

கறுவா ஏற்றுமதியில் மாத்திரம் ஒரு கோடி 32 லட்சம் வெளிநாட்டு நாணயம் இலங்கைக்குக் கிடைத்துள்ளது. கறுவாவைவிட தும்புக் கயிறு, தும்பு மெத்தை, பதனிடப்படாததோல் முதலியனவும் பெருந்தொகையாக இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகின்றன.

நாடு இன்று கைத்தொழி

மூலம் கூடிய வெளிநாட்டு நாணயத்தை இலங்கை பெறும்எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

— —

## புதிய நியமனங்கள்

அண்மையில் அரசாங்க சேவைக் கமிஷன்கீழ்க்காணுவோருக்கு புதிய நியமனங்கள் வழங்கியுள்ளது

கல்வி ஆலோசகர்கள்

திருவாளர்கள் வி அரசன் ஏ. அருளையா, எஸ் விஸ்வலிங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமளித்தேன்' என்று துன்ஞலை தெற்கைச் சேர்ந்த தொழிலாளியான பாலன் சின்னத்துரை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

ரியை விடுதலைசெய்து 1-ம், 2-ம் எதிரிகளைக் குற்றவாளியாகக்கண்டு எதிரிகளை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு, தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 11-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# வடக்கு-கிழக்கு தொகுதி வாக்கு அதிகரிப்பு விபரம

கொழும்பு, சனி

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆகக் கூடுதலான தொகை வாக்காளர்களை மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட கொழும்பு மத்தியதொகுதியும் தெஹிவளை, கல்கிசைத் தொகுதியும் கோட்டைத் தொகுதியும் கொண்டுள்ளது.

கொழும்பு மத்தியதொகுதி 99 265 வாக்காளர்களையும் தெஹிவளை, கல்கிசை 70,236 வாக்காளர்களையும் கோட்டை 68,383 வாக்காளர்களையும் கொண்டுள்ளது.

வடக்குகிழக்கிலுள்ள தொகுதிகளின் வாக்காளர் தொகை வருமாறு:

| தொகுதி | — வாக்காளா — | அதிகரிப்பு |
|---|---|---|
| ஊர்காவற்றுறை - | 32,015 | 230 |
| வட்டுக்கோட்டை - | 36,935 | 600 |
| காங்கேசன்துறை - | 37,804 | 2,495 |
| உடுவில் - | 36,935 | 3,410 |
| யாழ்ப்பாணம் - | 31,214 | 2,741 |
| நல்லூர் - | 35,747 | 3,883 |
| கோப்பாய் - | 37,464 | 4,373 |
| உடுப்பிட்டி - | 34,741 | 468 |
| பருத்தித்துறை - | 24,006 | 1.034 |
| சாவகச்சேரி - | 33,072 | 2,620 |
| கிளிநொச்சி - | 2.3793 | 5,055 |
| மன்னர் - | 25,441 | 4,023 |
| மூதூர் - | 44,176 | 5,660 |
| கல்குடா - | 26,670 | 2,662 |
| மட்டக்களப்பு - | 51,524 | 6,446 |
| அம்பாறை - | 42,029 | 3,113 |
| பட்டிருப்பு - | 28,992 | 3,137 |
| கல்முனை - | 24,693 | 2,330 |
| நிந்தாவூர் - | 29,718 | 3,221 |
| பொத்துவில் - | 28,282 | 4.696 |

(சி. பி. ஏ.)

## யாருடைய கூப்பன்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

குருநகர் டேவிட் றோட்டைச்சேர்ந்த முத்தன் யேசுராசா என்பவரால் யாழ் பஸ் நிலையத்திற்கு அண்மையில் இரு கூப்பன்கள் கண்டெடுக்கப் ட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

0 0 0

யாழ். மத்திய கல்லூரி மைதானத்திற்கும் சுப்பிரமணியம் பூங்காவுக்கு மிடையே வீதியில் ஒரு அரிசிப் பங்கீட்டுப் புத்தகம் கண்டெடுக்கப்பட்டு யாழ். பொதுசன நூலக உதவி மேற்பார்வையாளரான திரு சண்முகம் கந்தையாவிஞல் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில்வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## ஆங்கிலத்தில் மட்டும்

நல்லூர், சனி

பல ஆண்டுகளாக இருந்துவரும் நல்லூர் உப தபாற்கந்தோரில் நாட்டப்பட்டிருக்கும் அஞ்சல் அலுவலகப் பலகை ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கிறது. அண்மையில் இதனல் ஒரு வயோதிபர் தபால் நிலையத்திற்கென்று வந்து நல்லூர் சந்தையிலிருந்து முத்திரைச் சந்தைவரை கால் நடையாகவே சென்றுராம். போகும் வழியெல்லாம் தபாற்கந்தோர் எங்கே இருக்கின்றது என்பதை பார்த்துக் கொண்டு சென்ற வயோதிபர் முத்திரைச்சந்தைவரை சென்றும் தபாற்கந்தோரைக்கண்டுபிடிக முடியவில்லை.

டிக்கப்பட்[illegible]ர்களாவர்.

புதிய [illegible]ர்தல் சட்டத்தின் கீழ், சட்டவிரோத அல்லது ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்று நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் ஏழு ஆண்டுகளுக்கு, வாக்காளர்களாகவோ, வேட்பாளர்களாகவோ தேர்தலில் பங்குகொள்ளச் சட்டப்படி முடியாது.

இந்த அறுபத்தேழு நபர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல்கள் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் உள்ள பார்ட் ரத்வத்தை (பலாங்கொடை), திரு. ஆர். ஆர். டபிள்யு. ராஜபக்ஸ (தொடங்கஸ்லாந்தை) திரு. டி. எஸ். சமரசிங்கா (கொலன்ஞவ). திரு. டி. எச். வில்லியம் சிங்கோ (தெவிநுவரை), திரு. ஏ. கருணசேன(பெல்மதுளை)

மேற்படி ஏழு நபர்களில் தெவிநுவரை முன்னைநாள் எம் பி. திரு. வில்லியம் சிங்கோவைத் தவிர்ந்த ஏனைய ஆறு பேருக்கு எதிராகவும், 1965 தேர்தலுக்குப் பின்னர் தேர்தல் [illegible], வழியிருந்தது.

[illegible]ட்டத்திலிருந்த இந்தக் குறைபாட்டைப் பயன்படுத்தியே தேர்தல் நீதிமன்றத்தின் தீர்ப்பின் விளைவாக தேர்தல்செல்லாமற் போனலும் வெலிமடைத் தொகுதியில் திரு பெர்ஸி சமரவீர மீண்டும்மீண்டும் இடைத் தேர்தல்களிற்போட்டியிட்டு வெற்றிபெற்ருர்.

அண்மையில் தேர்தல் சட்டங்களில் செய்யப்பட்ட திருத்தம் சட்டத்திலிருந்த ஓட்டை அடைத்து விடடது. சி.பி.ஏ.

ளது. கறுவாவைவிட தும்புக்கயிறு, தும்பு மெத்தை, பதனிடப்படாததோல் முதலியனவும் பெருந்தொகையாக இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகின்றன.

நாடு இன்று கைத்தொழிலில் பெரும்வளர்ச்சியடைந்துள்ளதால் எதிர்காலத்தில் இந்தச்சிறிய பொருள்களின் ஏற்றுமதித்தொகை அதிகரிக்குமெனவும், அதன்

# அரசுக்கு எதிராக இ. தி. மு. க. வழக்கு தாக்கல் செய்யும்?

யாழ்ப்பாணம், ஞாயிறு

**இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கையின் அரசியல் கட்சிகளில் ஒன்ருக அங்கீகரிக்கப்படாததை ஆட்சேபித்து, கழகத்தின் தலைமைப்பீடம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.**

இந்தத் தகவலை இலங்கை திராவிட முன்னேற்றக்கழக பிரமுகரும் கழகத்தின் முன்ஞள் பொதுச் செயலாளருமான திரு. இரா: இளஞ்செழியன் தெரிவித்தார்.

பழைய அரசியல் கட்சிகள் தவிர இம்முறை எந்தவொரு புதிய அரசியல்கட்சியும் தேர்தல் கமிஷனரால் அங்கீகரிக்கப்படவில்லை பதினைந்து புதிய கட்சிகள் தம்மை அரசியல் கட்சிகளாக அங்கீகரிக்கும்படி விண்ணப்பித்திருந்தன. ஆஞல் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

நீண்டகாலமாக இலங்கையில் இயங்கிவரும் இயக்கமான இ. தி. மு. க.வை அங்கீகரிக்காததற்கு எவ்வித காரணமுமில்லையென்றும், அரசியல் கட்சிகளில் ஒன்ருக அங்கீகரிக்கப்படுவதற்குரிய விதிமுறைகளுடனேயே அது இயங்கிவருவதாக திரு. இளஞ்செழியன் கூறினர்.

நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல்செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் தகவல் தெரிவித்தார்.

இலங்கையில் உயர்தர வழக்கறிஞர்களுடன் இதற்கான சட்ட ஆலோசனைகள் செய்யப்பட்டு வழக்கைத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினர்

## தேர்தலில் போட்டியிடும் இ.தி.மு.க அபேட்சகர்கள்

உடுப்பிட்டி, சனி

இலங்கைத் திராவிடமுன்னேற்றக்கழகமும் அடுத்த பொதுத் தேர்தலில் தனது அபேட்சகர்களை நிறுத்த முடிவுசெய்துள்ளது. இலங்கையில் ஆறு தொகுதிகளில் இ. தி. மு. க, போட்டியிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது

இதுவரை 5 தொகுதிகளில் போட்டியிடும் இலங்கைத்திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. அபேட்சகர்களின் விபரம் வருமாறு:-

பருத்தித்துறை: திரு, பூ. ஆ. விசாகரத்தினம், கொழும்பு மத்திய தொகுதி: திரு. ஆ. நடராசா, மட்டக்களப்பு: திரு. சேவியர், கிளிநொச்சி: திரு. க. சண்முகராசா. மன்ஞர்: திரு. எ. உ தேவராசா.

மலையகப் பகுதியிலும் இ. தி. மு. க. அபேட்சகர் ஒருவர் போட்டியிடுவாரெனவும் நமது நிருபரிடம் தெரிவிக்கப்பட்டது,

## "ஈழநாடு" பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் **'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

### உதவி வழங்கியோர்:

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 9,313 07 |
| அல்லைப்பிட்டி சனசமூக நிலைய நிர்வாகிகள்: | |
| நீ. சவரிமுத்து | 1-00 |
| சி. ஜி. செல்லத்தம்பு | 1-00 |
| செ. செல்லத்துரை | 1-00 |
| செ. இராசையா | 1-00 |
| செ. பஞ்சாட்சரம் | 2-00 |
| அ. செல்வராசா | 2-00 |
| த. அருணகிரிநாதன் | 2-00 |
| நா. சச்சிதானந்தன் | 3-00 |

வெள்ளநிவாரண

## யாழ் குழு வழங்கும் நிதி

கொழும்பு, சனி

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட வெள்ள நிவாரண நிதியிலிருந்து 10,000 ரூபாய் மாத்தறை மாவட்டத்திற்கும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 10,000 ரூபாயும் நிதி வழங்குவதென்று யாழ்ப்பாண மாவட்ட வெள்ள நிவாரண நிதிக்குழு முடிவு செய்திருக்கிறது.

மேலும் அதிக பணம் சேரும் பட்சத்தில் மேலும் நிதி உதவிகள் செய்வதற்கு இக்குழுமுடிவுசெய்துள்ளது.

பிரச்சாரவேலையை

## பிரதமர் பக்தியுடன் ஆரம்பித்தார்

கொழும்பு, சனி

பிரதமமந்திரி திருடட்லி சேனநாயகா இன்றுதாம் போட்டியிடும் டெடிகம தொகுதியில் தமது தேர்தல் பிரசார வேலைகளை பக்திசிரத்தையுடன் ஆரம்பித்தார்.

கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்கும் விஷ்ணுதேவாலயத்துக்கும் சென்று திரு டட்லி சேனநாயகாபூஜைகள் நடத்திஞர். (சிபிஏ)

## பஸ்ஸிலிருந்து விழுந்து மரணம்

கண்டி. சனி

கடந்த வியாழக்கிழமை காலிவீதியில் மகாவஸ்கடுவ என்ற இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸிலிருந்து 55வயது வயோதிபமாது வெலிமன் கடகன்டிய என்ற இடத்தில் கீழே விழுந்து மரணமாஞர் பஸ் சாரதியும் கண்டக்டரும் கைதுசெய்யப்பட்டனர்

சேவைக் கமிஷன்கீழ்க்காணு வோருக்கு புதிய நியமனங்கள் வழங்கியுள்ளது

கல்வி ஆலோசகர்கள்

திருவாளர்கள் வி அரசன் ஏ. அருளையா, எஸ் விஸ்வலிங்கம்.

தேகப்பயிற்சி ஆர் எஸ். சீவரத்தினம்.

அளவைப்பகுதி உதவி அளவை அதிபர் திரு ஏ. தம்பிராஜா.

அளவைப்பகுதி விசேட டிராவ்ஸ்மென் திரு ஈ. மயில்வாகனம்.

மின்சக்தி தொலைபேசித் தொடர்பு விரிவுரையாளர் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி திரு பி. மகாதேவன்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்கள்: திருவாளர்கள் ரி, வேலாயுதம், ஏ ஸ்ரீஸ்கந்தராசா, எஸ். சுப்பிரமணியம் ஏ எல். பி. ஹென்ஸ்மன்.

குடிசன புள்ளித் தயாரிப்பு நிகழ்ச்சித் தயாரிப்பாளர் செல்வி பி. பாலகிருஷ்ணன்.

## இன்று பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்றுமாலை நிசழவிருக்கிறது. ஆரம்பக் கல்விமா அதிபதி திரு பி.பி. எம். சேனநாயகா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ் விழாவில் நல்லூர் முன்னுள் எம். பி. திரு ஈ. எம். வி. நாகநாதன் உட்பட வேறுபலர் கலந்து கொண்டு உரையாற்றுவர். விவசாய மன்னன் திரு கே. நாகலிங்கம் பரிசுகளை வழங்குவார்.

நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்.

0 0 0

யாழ்ப்பாணம், ஞாயிறு

லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தில் இணைந்துள்ள கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாண மலாயா கபே மேல் மாடியில், மேற்படி சங்க வட மாகாணப் பிரதிநிதி திரு. எஸ். நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம பேச்சாளராக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கப் பொதுக்காரியதரிசி திரு. டபிள்யு. எல். பெர்ஞண்டோ கலந்துகொள்வார்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

டொலர் அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 'ஒழுக்கமே கலைக்கு உயிர்'

யாழ்ப்பாணம், சனி
கலையின் மூலம் நாட்டின் ஒழுக்கத்தை நிலைநாட்ட வேண்டும். நல்ல லட்சியங்களைத் சுட்டிக் காட்டுகின்ற நாடகங்கள் வரவேற்கப்பட வேண்டும். பல அரிய நாடகங்களை இந்த அடிப்படையிலேயே சுண்டிக்குளி கே. பி. எம். நாடகமன்றத்தினர் தயாரித்து வருகின்றது. இதன் சேவையும், இளைஞர்களின் உழைப்பும் கலைவளர்ச்சிக்கு உரமாக அமைய வேண்டும்'

இவ்வாறு அண்மையில் யாழ். திறந்தவெளி அரங்கில் 'நீரூற்று' நாடகத்தின் 37-வது விழாவை குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த யாழ். நகர முதல்வர் திரு. ரி. எஸ். துரைராஜா தெரிவித்தார்.

திரு. செல்வரத்தினம் கோஷ்டியினரின் இசைநிகழ்ச்சிக்குப் பின்னர் நடைபெற்ற 'நாடகம்' என்னும் பொருள்பற்றிய கவிதை அரங்குக்கு கவிஞர் இ. நாகராஜன் தலைமை வகித்தார். கவிஞர்கள் காரை வே. ஐயாத்துரை, செ. சுந்தரம்பிள்ளை, பரமலிங்கம், வளலை சிவசம்பு ஆகியோர் பாடினர்.

உரையரங்கு திரு. அந்தனிசில் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் வி. கந்தவனம், வி. சி. பரமானந்தம், மதிமுகராசா, ஸ்ரீசங்கர் முதலியோர் பங்குபற்றினர் 'நீரூற்று'க் கேள்விப் போட்டியில் முன்னிடம் பெற்ற அனைவருக்கும் கவிஞர் இ. நாகராஜன், திரு. அந்தனிசில் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

## 'இளமையிற் கல்வியே எதிர்காலத்தை சிறப்பிக்கிறது'

உடுப்பிட்டி, சனி
'இளம் வயதிலிருந்தே சிறு பிள்ளைகளின் கல்வியில் காட்டும் கவனம் தான் எதிர் காலத்தில் அச்சிறுவன் கல்வமானுகத் திகழக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்குகின்றது' என ஆசிரியர் திரு. ஆ. ம. செல்வத்துரை வதிரி தமிழ் மன்றத்தின் ஆதரவில் தமிழ் மன்றநூல் நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாலர் வகுப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

சைவப் புலவர் திரு. சி. வல்லிபுரம் பேசுகையில் 'பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி எந்த நிலையில் உள்ளது என்பதை அடிக்கடி அப்பிள்ளையின் ஆசிரியரைக் கண்டு தெரிந்து கொள்வதுடன் அதற்கேற்ற முறையில் பாடங்களைப் புகட்ட முயற்சி செய்ய வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

இவ்வகுப்பு அதிபர் திரு. ஏ. டி. நைல்ஸ், உட்பட வேறு பலரும் பேசினர். செல்வி புஷ்பவதி தம்பிஐயா பாலர் வகுப்பு ஆசிரியையாக நியமிக்கப்பட்டு உள்ளார்.

## நாளைபாராட்டு விழா

யாழ்ப்பாணம் ஞாயிறு
மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரியில் பலகாலம்சேவையாற்றி ஒய்வு பெற்ற டாக்டர் வி. பாலசிங்கத்துக்கு மானிப்பாயில்நாளை (6-4-70 திங்கட்கிழமை ஒரு பாராட்டு உபசாரமளிக்கப்படவிருக்கிறது. பிற்பகல் ஐந்தரை மணிக்கு பட்டினசபை அரங்கில் நடைபெறும் இவ்விழாவுக்கு திரு. ச. பேரின்பநாயகம் தலைமைவகிப்பார்.


தெய்வீக சுகமளிக்கும்
ஆராதனைகள்
ஏப்பிரல் மீ 3-ம் திகதி முதல் 6-ம் திகதி வரை
மாலை 6 மணிக்கு
வீரசிங்கம் மண்டபத்தில்
(யாழ்ப்பாண பெரிய தபால் கந்தோர் அருகில்)
விசாரணைகள்
இலங்கை பெந்தெகோஸ்தே சபை,
111, கண்டி றேட்,
சுண்டிக்குளி. 2206


## நெல்லியடிப் பட்டினம் கேள்வி விளம்பரம்

1970-ம் ஆண்டு, சித்திரை மாதம் 18-ந் திகதி (18-4-1970) முற்பகல் 10-00 மணி வரைக்கும், மேற்படி பட்டின விசேஷ ஆணையாளரால் கீழ்க் காணும்வேலைகளுக்குப்பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து ''சீல்'' வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும், கேள்விப் பிணைப் பணம் ரூபா 50/-ம், பத்திரப்பணம் இதன் கீழ் ஒவ்வொரு வேலைகளுக்கும் கொடுக்கப் பட்டபடி செலுத்தியதின்பேரில் 17-4-1970 பிற்பகல் 2-30 மணி வரை விசேஷ ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரத்தில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ விசேஷ ஆணையாளருக்கு எச்சமயத்திலும் பூரண உரிமையுண்டு.

ஏனைய விபரங்கள் யாவும் நெல்லியடிப்பட்டின விசேஷ ஆணையாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

அ. அ. ஜோசெப்,
விசேஷ ஆணையாளர்,
நெல்லியடிப் பட்டினம்.

| வேலைகளின் விபரம் | பத்திரப் பணம் |
|---|---|
| 1 பட்டின சபைக்கந் தோர்க் கட்டிடம் விசாலித்து அமைத்தலும் (பகும் 1), துவிச்சக்கரவண்டி நிறுத்தும் மடுவம் நிறுவுதலும்...... | ரூ. 10-00 |
| 2. மித்தில் தெரு திருத்தி அமைத்தல் வட்டாரம்-3...... | ரூ. 10-00 |
| 3. கோவிற் சந்தைக்கு முள்ளுக்கம்பி வேலி அமைத்து, கேற் (Gate) போடுதல்......... | ரூ. 5-00 |
| 4. மூன்றும் வட்டாரத்திலுள்ள பட்டினசபைக் காணியில் கிணறு அமைத்தல்...... | ரூ. 5-00 |

விசேஷ ஆணையாளர்
அலுவலகம்,
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி,
3-4-1970. 2210

## பொதுத் தேர்தல் 1970

அகில இலங்கை ஐக்கிய சுதந்திரக்கட்சி தேர்தல் தொகுதிகள்: உடுவில் 77, வவுனியா 86, நல்லூர் 79, மன்னர் 85, திருகோணமலை 87, மட்டக்களப்பு 90.

இக்கட்சி மேற்படி தொகுதிகளில் போட்டியிட நிச்சயித்திருக்கின்றது.

எமது கட்சிக் கொள்கைகள்.

பொது மொழி: வடக்கு, கிழக்கு என்ற பாகுபாடில்லாமல் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட எல்லோரும் ஒரேயொருஅகன்ற மாகாணப் பிரிவில் வசிக்க வேண்டும். இவர்கள் அரச பாஷை தமிழ்.

சிங்களவர் மேல்நாடு கீழ் நாடு அல்லது இருவரும் ஒரு நாடாகலாம், இது அவர்கள் விருப்பை பொறுத்தது. சிங்களம் அவர்கள் அரச பாஷை.

விசேஷ மொழி: ஆங்கிலம் எல்லா மாகாணங்களிலும் பிரஜாவுரிமையாளர் விருப்பப்படி திகழ வேண்டும்.

மாகாண ஆட்சி மத்திய அரசின் 'குடைக்'கீழ் வலுவுடன் நிலைக்க வேண்டும். எனவே 'குடை'யே எமது சின்னம்.

நாட்டின் பொருளாதாரம் முன்னேறி கூப்பன் தடை மறைய வேண்டும்.

சமயவெறியைத்துடைக்க எமது கொடி மூவர்ணமுடையது. வெண்சிகப்பு-இந்து, பௌத்தருக்கும், நீலம்-கிறீத்தவருக்கும், பச்சை-இஸ்லாமியருக்கும் அமையும். ★

போட்டியிட விரும்பும் அபேட்சகர் எமது காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

எமக்கு ஒரு வீடு இருக்கிறது, வசிக்க! ஓடி உலவ ஒரு துவிச்சக்கரமுண்டு!! மானமுள்ள தமிழரே மழை, வெய்யிலுக்கு ஒரு குடை தாருங்கள்!!!

அலுவலகம்
'நித்தியானந்தா'
71/6, கலட்டி,
யாழ்ப்பாணம்,
31-3-70.



## வரி விளம்பரம்

### தேவை

மட்டக்களப்பில் வீடு ஒன்றில் தங்கியிருந்து சமைப்பதற்கு நபர் ஒருவர் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு உடன் நேரில் வரவும். C. S. K. மில், யாழ்ப்பாணம். 1965

கொழும்புக்கருகாமையிலுள்ள தொழிற் சாலையொன்றில் சமையல் செய்பவருக்கு உதவிச் சமையல் ஆண்பிள்ளை ஒருவர் தேவை. விபரங்கட்கு: ஜபர்ஜீ பிரதர்ஸ், 218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்துக்கு நேரில் வரவும். 2011

### விற்பனைக்கு

கீரிமலை - வாடி வீடு 27 பரப்பு. காங்கேசன் துறை வீதி. கேணி, துறைமுகம், சீமெந்து தொழிற்சாலைக்கு அருகாமையில்- 2 அல்லது 3 பரப்புத் துண்டுகளாக வீட்டுடன் அல்லது வீடில்லாமல் பெற்றுக்கொள்ளலாம். பருத்தித்துறை12பரப்பு வி. எம். வீதி வடமராட்சிப் பெண் பாடசாலைக்கு அருகாமையில். 2 பரப்புத் துண்டுகளாகப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும். நாகநாதன், அத்தியடி, பருத்தித்துறை. 2012

கடை:
யாழ்ப்பாணம் பெரிய கடை கஸ்தூரியார் வீதியில் பிரபலமாக வியாபாரம் நடக்கும் ஸ்தாபனம் ஒன்று இருக்கும் மேல்மாடியுடன் கூடிய கிட்டங்கி விற்பனைக்கு உண்டு. கடிதம் மூலம் தொடர்பு கொள்க. இல 2013, மேபா 'ஈழநாடு' லிமிட்டட், யாழ்ப்பாணம். 2013

### வாடகைக்கு

வீடு:
நாச்சிமார் கோவிலடியில் சகல வசதியுமுள்ள புதிய வீடு 15-4-70 தொடக்கம் வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: S. பத்மசிகாமணி, மின்சாரநிலையம், சுன்னுகம். 2016

## றேயலுடனுன கிரிக்கெட் மோதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ். மத்திய கல்லூரிக்கும், கொழும்பு றேயல் கல்லூரிக்குமிடையில் இன்றும், நாளையும் நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டி தவிர்க்க முடியாத சில காரணங்களினுல் திடீரெனப் பின் போடப்பட்டுள்ளது.

இப் போட்டி இம்மாதம் 7-ம், 8-ம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுமென யாழ். மத்திய கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (தே. நி)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
ஆனந்தன்-தேவிகா
நடித்த
குபேரதீவு

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
கல்யாணகுமார் - தேவிகா
நடித்த
நெஞ்சம் மறப்பதில்லை

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p m
Poya, Prepoya 4 shows
Carroll Baker
And
George Maharis
SYLYIA
(Color-adults only)
(An exceting Love Story)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திரா

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் (3 வேடங்களில்)
விஜயநிர்மலா - பாலையா
நடித்த
சிரிக்க முகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'அல்கதீன்'

உபயோகிப்பதற்கு மிக இலகுவான குழாய், நீளம் வாய்ந்தது - எளி தாய் வளைந்துகொடுப்பது

கமத்தொழிலுக்கும், உணவு உற்பத்திக்கும், இன்று ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினை, இலகு வானதும், திறம்பட்டதும், செலவு குறைந்தது மான நீர்ப்பாய்ச்சு முறை எது என்பதுதான்.

**அல்கதீன் அப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கிறது.**

நெடு நீளம் வாய்ந்தது, எளிதில் வளைந்து கொடுப்பது, எடை குறைந்தது, பிரித்தமைக்கக்கூடிய மூட்டுகள் கொண்டது, செலவு குறைவானது, அரிக்கப்பட்டு அழிந்தொழியாதது, நொருங்காதது, உராய்வுச் சேதம் இல்லாதது.

**இவற்றுடன் இன்னும் எத்தனையோ குணநலங்கள்!**

கமத்தொழில், கட்டிட அமைப்புகள், வீடமைப்பு ஆகியவற்றில் நீர் வசதி பற்றிய பிரச்சினை எது எழுந்தாலும்-அல்கதீன் அவற்றை விரைவாக நீக்கி வைக்கும்.

**'அல்கதீன்'**

பிற குழாய் வகைகள் யாவற்றிலும் சிறந்து விளங்குவது!

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்,
தபாற் பெட்டி இல: 352, கொழும்பு.
AJNA.

---

(யாழ்ப்பாண பெரிய தபால் கந்தோர் அருகில்)
விசாரணைகள்
இலங்கை பெந்தெகோஸ்தே சபை,
111, கண்டி றோட்,
சுண்டிக்குளி. 2206

---

## கல்வி - கலாச்சார அமைச்சு
### தேசிய கலாச்சார பரிசு வழங்கல் - 1969

1969 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து 1969 டிசம்பர் 31ஆம் திகதி வரைக்குட்பட்ட கால எல்லைக்குள், நிறைவெய்திய படைப்புக்கள் பின்வரும் பிரிவுகளில், தேசிய கலாச்சார பரிசில்களுக்கு பரிசிலனை செய்யப்படும்.

(1) தமிழ் நாட்டிய நாடகம்
(2) தமிழ் இசை:
 (அ) கூட்டு வாத்திய இசை.
 (ஆ) கூட்டு வாய்ப்பாட்டுக்கான இசை.
 (இ) திரைப்படம், நாட்டிய நாடகம் ஆகியவற்றுக்காக அமைக்கப்பட்ட இசை.
 (ஈ) வானொலியில் ஒலிபரப்பப்பட்ட இசை.

இப்பரிசில்களுக்குப் போட்டியிட விரும்புவோர் மேலும் தகவல்களுக்கு கீழுள்ள விலாசத்துக்கு எழுதுங்கள்.

பொதுக்காரியதரிசி,
இலங்கைக்கலைக் கழகம்,
135, தர்மபால மாவத்தை.
கொழும்பு-7.

2203

---

யாழ்ப்பாணம் பஸ்நிலையப் பக்கமிருக்கும்

## சன்லைட் டையேர்ஸ் அன் றைக்கிளீனேர்ஸ்

ஸ்தாபனத்தாராகிய நாங்கள் பல பிரமுகர்களின் வேண்டுகோளுக்கிணங்கி யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டர்சந்தியில் உள்ள 52-ம் இலக்கக் கட்டிடத்தில்

## சாயி றைக்கிளீனேர்ஸ்

கிளை ஸ்தாபனத்தை

**11-4-70ல் ஆரம்பிக்க**

நிச்சயித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொலைபேசி எண்: 474 தந்தி: றைக்கிளீன்

---

பட்டினசபைக் காணியில் கிணறு அமைத்தல்...... ரூ. 5-00

விசேஷ ஆணையாளர்
அலுவலகம்,
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி,
3-4-1970. 2210

---

WANTED

Wanted - Manager for a firm in Vavuniya with knowledge of Tractor and Motor Spares, Agro-chemicals and able to maintain accounts. Salary according to qualifications and experience. Apply Avdt. No. 2008 C/o Box No. 49, Eelanadu. 2008

---

## மானிப்பாய் ப: ச. தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு மானிப்பாய் பட்டினசபையின் மாதாந்தக்கூட்டத்தில் மானிப்பாய் - தாவடி வீதிக்கு காலஞ்சென்ற சமூகத் தொண்டரான சமூக ஜோதி கேட்முதலியார் திரு. ஸி. தியாகராஜாவின் பெயர் சூட்டுவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

திரு. சி. மார்க்கண்டுவினால் கொண்டுவரப்பட்ட இப் பிரேரணையை திரு. த. தேவராஜா அனுவதித்தார்.

---



கௌரவ
பொதுக்காரியதரிசி

★ விரிவு எமது 'பகவதி' என்னும் பதிவுபெற்ற புஸ்தகச் சஞ்சிகையில் காணவும். இது 1964-ல் தொடங்கி இதுவரை வெளிவருகின்றது. வருஷ சந்தா ரூ. 6/- அங்கத்தவருக்கு இனும், 2209

---

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 shows
Tony Franciosa,
Requel Welch
in
FATHOM

---

## தினசரி சேமிப்புக்கு

வருடம் 6 சதவீத வட்டி

கொடுக்கப்படும்

இப்பணத்தை எப்பொழுதும் எடுக்கலாம்.

மறுவிபரங்கட்கு:-

# தம்பி அன் கோ

வண்ணார்பண்ணை — யாழ்ப்பாணம்

---

# S. R. S. ஜவுளி மாளிகையில்
# புதுவருட மலிவு விற்பனை

குதூகலமாக நடைபெறுகிறது!

எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன்துறை வீதி (போன்: 296) யாழ்ப்பாணம்.

---

ராணி ஜெய்சங்கர் (3 வேடங்களில்)
(யாழ்ப்பாணம்) விஜயநிர்மலா - பாலையா
தினசரி 3 காட்சிகள் நடித்த

# சிரித்த முகம்

---

யாழ்-வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்—விஜயகுமாரி
நடித்த

# செல்வியின் செல்வன்


---

வெற்றிகரமான 3 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்



## சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா, நாகேஷ், நம்பியார்
ஏ. வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்

# தில்லானா மோகனாம்பாள்

---

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)

ஆகிய திரைகளில்

முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி
நடித்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# சுபதினம்

# கடத்திச்சென்ற தூதுவரை விடுவிக்க
# 7 லட்சம் டாலர் பணமும் 25 அரசியல் கைதிகளும் தேவை
## கொரில்லாப் படையினரின் கெடுபிடி

கௌத்தமாலா, ஏப். 4 சென்ற செவ்வாய்க்கிழமையன்று, கௌத்தமாலா நாட்டிலிருந்து கொரில்லாப் படையினரால் கடத்திச் செல்லப்பட்ட மேற்கு ஜெர்மனித் தூதுவரை விடுவிக்க 7 லட்சம் டாலர் பணமும் கொடுப்பதோடு 25 அரசியற் கைதிகளை விடுவிக்க வேண்டுமென்று கொரில்லாப் படையினர் கோரியுள்ளனர்

மேற்கு ஜெர்மன் தூதுவரை விடுவிப்பதற்காக அரசியல் கைதிகள் எவரையும் பரிமாற்றம் செய்துகொள்வதில்லையென்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டது கௌதமாலா அரசாங்கம். அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம்செய்து, நாட்டின் ஆட்சிப் பொறுப்பை 30 நாட்களுக்கு இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளது

கொரில்லாப் படையினரின் நபர் கடத்தல் நடவடிக்கைகளும், வன்முறைச் செயல்களும், கடந்த சில வாரங்களாக உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதால், கௌத்தமாலா நாட்டில் பெரும் கலவரமான- அமைதியற்ற சூழ்நிலை நிலவிவருகிறது

கௌத்தமாலா நாட்டில் உள்ள எல்லா அந்நியநாட்டுத் தூதுவர்களுக்கும் ஆயுதந் தாங்கிய மெய்க்காப்பாளர்களை கொடுத்துதவவும், புதிய இராணு ஆட்சி முன்வந்துள்ளது.

### “சாஸ்திரியின்
# மரணம் பற்றி விசாரிக்க விசாரணைக் கமிட்டி தேவை”
## டெல்லி மேல்சபையில் வற்புறுத்து

புதுடில்லி, ஏப் 4 மறைந்த முன்னை நாள் பாரதப் பிரதமர் திரு. லால் பகதூர்சாஸ்திரியின் மரணத்தில் மர்மங்கள் இருப்பதாக டெல்லி மேல்சபையில் பல உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். சாஸ்திரியின் மரணம் எப்படிச் சம்பவித்தது என்று விசாரிப்பதற்காக சுப்ரீம் கோர்ட் நீதிபதி தலைமையில் ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை உறுப்பினர்கள் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர்.

இந்தியாவின் பிரதமராக விருந்த திரு. லால்பகதூர் சாஸ்திரி ரஷ்யாவில் தாஷ்கண்ட் நகரில் மரணமடைந்தது தெரிந்ததே.

சாஸ்திரியுடன் ரஷ்யா சென்ற டாக்டர் சக், சாஸ்திரி மரணம்பற்றி தயாரித்த அறிக்கைகளை வெளியிட வேண்டும். ஏனெனில் சாஸ்திரிக்கு சிகிச்சை அளித்த ரஷ்ய டாக்டர்கள் அறிக்கை தர மறுத்துள்ளனர். என்று சுயேச்சை அங்கத்தவர் பார்கவா கூறினுர்.

வலதுசாரி கம்யூனிஸ்ட் அங்கத்தவர் பேசுகையில் சாஸ்திரி மரணத்தில் மர்மம் எதுவும் இல்லையென்ருலும் கூட அதுபற்றி விசாரணை நடத்தியே தீர வேண்டும் என்ருர்.

உள்நாட்டு இலாகா இராஜாங்க மந்திரி பதிலளிக்கையில், சாஸ்திரி மரணம் அடைந்த போது நடந்த பல நிகழ்ச்சிகள் வெளியாகாமல் இருக்கலாம். அவற்றை வெளியிட வேண்டியது அவசியம்தான் என்றும் ஆயினும் எந்த விடயத்தையும்மறைக்கவேண்டுமென்று டெல்லி அரசு விரும்பவில்லையென்றும் சாஸ்திரியுடன் சவானும் தாஷ்கண்ட்போயிருந்ததால் அவரும் பல தகவல்களை வெளியிடலாம் என்றும் கூறினுர்.

சாஸ்திரி மரணம்பற்றிய பல புதிய தகவல்கள் என்னிடம் இருக்கின்றன. விசாரணைக் கமிட்டி அமைத்தால் அதனிடம் ஒப்படைப்பேன். இல்லாவிட்டால் இச்சபையிலேயே வெளியிடுவேன் என பிரகாஷ்மீர் சாஸ்திரி கூறியுள்ளார்.

இதுபற்றி சபையில் வெள்ளிக்கிழமை விவாதிக்கப்பட வேண்டும் எனவும் சவான் பேசவேண்டுமெனவும் மேல் சபைத் தலைவர் அறிவித்துள்ளார்.

# டெல்லி சட்டசபையில்

# “மதுவை ஒழிக்க மக்கள் ஒன்றுசேரவேண்டும்”

மாவிட்டபுரம், சனி “தேர்தல் காலமான இன்றுமக்கள் தமதுவாக்கை அளிப்பதற்கு முன் அபேட்சகர்களிடமிருந்து மதுவை ஆதரிக்கிறீர்களா இல்லையா? என்றுகேட்டு அவர்கள் மதுவை ஒழிக்க சட்டம் கொண்டுவர முடியுமாயின் அவர்களையே ஆதரிப்போம் என்று வாக்குறுதியளிப்பது மதுவை ஒழிக்க ஓர் நல்லவழியாகும்.”

இவ்வாறு வலி-வடக்கு காரியாதிகாரி காரியாலத்தில் நடைபெற்ற 1—வது மது ஒழிப்பு இயக்க அங்குராற்பண கூட்டத்தில் உரையாற்றிய சமாதான நீதிபதி திரு. ஆ. தெட்சணுமூர்த்தி கூறினுர்.

காரியாதிகாரி திரு. பி. எல் பற்றிக்ஸ் தலைமையில்நடைபெற்ற இக் கூட்டத்தில் வலி. வடக்கு பகுதியைச் சேர்ந்தகிராம சேவையாளர்களும், மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

திரு. தெட்சணுமூர்த்தி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

“முன்பு காங்கேசன் துறையில் சாரயத்தவறணை கள்ளுத்தவறணைகள் அந்நிய நாட்டு குடிவகைச்சார்ப்பு முதலியன இடம்பெற்றிருந்தன. இத்தொகுதிக்கு அப்போது சேர் பொன். இராமநாதன் சட்ட நிருபணசபையில் பிரதிநிதியாக கடமையாற்றினுர்.

சாரயத்தவறணைக்கு பதிலாக எமது கலாச்சாரத்துக்கேற்ற மோர் தவறணையில் பள்ளி மாணவர்களை அமர்த்தி அரும்பணியில் ஈடுபட்டதன் பயனுக சாராயத்தவறணை வியாபாரம் குன்றிவிட்டது. சாராயத்தவறணை இறுதியில் இல்லாமல்போய் விட்டது.

மதுபானத்தின் விளைவால் எத்தனையோ கொலைகள், காடைத்தனங்கள் அசம்பாவிதங்கள், வறுமை அவமானம் முதலியனஎங்கள் முன் நடந்து கொண்டிருககின்றன.

இலங்கையில் பெரும்பாலான மக்கள் பௌத்த சமயத்தையே தழுவுகிருர்கள். புத்தபிரானின் கொள்கைக்கு மாருக அவர்கள் மதுவை ஆதரிக்கிருர்கள்.

கிறிஸ்தவசமயமோ, இஸ்லாமிய சமயமோ, சைவசமயமோ மதுவை நிராகரிக்காமலில்லை.

மகாத்மா காந்தியின் 100-வது பிறந்த தினத்தை கொண்டாடும் அரசாங்கமும் மக்களும் அவரின் கொள்கைகளில் ஒன்ருன மதுவிலக்கை கையாளுகின்றனர் என்ருல் இல்லைஎன்றே கூறலாம்

எனவே மதுவை முற்ருக ஒழிப்பதாயின் அரசாங்கத்தையோ அல்லது அரசியல் வாதிகளையோ நம்பியிருக்காமல் மக்கள் ஒன்றுசேர்ந்து ஒவ்வொரு தொகுதிகளிலும் ஒரு குழுவை தேர்ந்து ஒருசமாசமாக நிறுவி இந்த இயக்கத்தை வளர்க்க முன்வர வேண்டும்”

—

## பிரதம கமிஷனர்

கோட்டை, சனி லண்டன் தேயிலை நிலையத்தி தலைவரான திரு. பி. ஜேசுதாசன் ஐரோப்பாவின் பிரதம கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிருர். ஐரோப்பாவில் இலங்கைத் தேயிலையின் விற்பனை முழுவதற்கும் இவர் பொறுப்பாகவிருப்பார்.

### குடும்பக்கட்டுப்பாட்டுக்கு
# முழு நீளப் பிரச்சாரப் படம் தயாரிப்போம்
## தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஏப்ரல் 4 குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளை நாட்டுமக்களிடையே தீவிரமாகப்பரப்ப உதவிசெய்யக்கூடியவகையில் ‘சிறு குடும்பம்’ என்ற முழு நீளத்திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க தமிழ்நாடு அரசு தீர்மானித்திருக்கிறது

சென்னையில், திரைப்பட நுட்பவியல்கழக விழாவொன்றில் கலந்துகொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணநிதி அவ் விழாவில் பேசுகையில் இதனை வெளியிட்டார்

தமிழகத்தில் கலைஞர்கள் பற்ருக்குறையைப் போக்குமுகமாக நடிக, நடிகர்களுக்கு நடிப்புப் பயிற்சியளிக்கும் பயிற்சிக்கல்லூரிஒன்றை அரசின் ஆதரவில் நிறுவுவது பற்றியும் தீவிரமாக ஆலோசித்துவருவதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்

### “வடக்கிலும், கிழக்கிலும்
# 2 மாதகாலம் ஆட்சி செலுத்த முடியாதிருந்தது”
### — செனட்டர் சு. நடராசா

அல்லைப்பிட்டி, சனி “சிறுபான்மை இனமாகிய தமிழினத்தின் ஆதரவின்றி இந்நாட்டில் ஸ்திரமான ஓர் அரசாங்கத்தை அமைக்க முடியாதென்பதை இன்றுள்ள பெரிய சிங்களக்கட்சிகள்வரை ஒப்புக்கொள்ளுகின்றன” என ஊரைதீவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பிரசாரக்கூட்டத்தில் பேசும்போது [illegible] டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்தார். திரு. இளைய [illegible] திணறடிக்கவைத்தோம். வட. கிழக்கு மாகாணங்களில் இரண்டு மாத காலத்திலும் எம்மை ஆட்சி செலுத்தமுடியாமல் போய் விட்டது. இப்படி இன்னும் பல போராட்டங்கள்செய்ய நாம் தயாராகஇருக்கவேண்டும்” என்ருர். திருவாளர்கள் என் கே தர்மலிங்கம், க திருநாவுக்கரசு, சுப்பிரமணியம், இராமகிருஷ்ணன் உட்பட வேறுபலரும் உரையாற்றினுர்கள்.

—

## நாரந்தனைக்கு முதலிடம்

ஊர்காவற்றுறை, சனி யாழ்ப்பாண மாவட்ட உடற்பயிற்சிப் போட்டியில் கீழ்ப்பிரிவில் ஆண்களில் முதலாம் இடத்தை நாரந்தனை

# “வானம்பார்த்த பூமிக்கு மகாவலிகங்கை வருகை ஒரு பெரிய வரப்பிரசாதம்”

யாழ்ப்பாணம், ஞா. யாழ். அரியாலை கிழக்கு அரசினர் த. க. பாடசாலை முன்றலில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் தலைவர் திரு. சு. தம்பாபிள்ளை தலைமையில் மகாவலி கங்கைத் திட்ட அங்குரார்ப்பண விழா சிறப்பாக நடைபெற்றது, தலைவர் முன்னுரையில் இலங்கையில் உள்ள தேசிய இனம் அனைவருக்கும் மகாவலி கங்கைத்திட்டத்தினுல் பெரும் நன்மை கிடைக்கும் என இரத்தினச்சுருக்கமாக கூறினுர். நல்லூர் கிராம சபை உப அக்கிராசனர் திரு. சு. அருளம்பலம் விழாவில் கலந்துகெண்ட மக்களை அன்புடன் வரவேற்று உரை வழங்கினுர்.

ஆசிரியர் திரு. பிரான்சீஸ் சென். ரேச் பேசுகையில், “நம் நாடும் மகாவலி கங்கைத் திட்டமும்” என்ற பொருள்பற்றி சொற்பொழிவு ஆற்றினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஈழம் மகாவலி கங்கைத் திட்டத்தினுல் பண்டைய நெற்களஞ்சியம் என்ற பெருமையை திரும்பவும் பெறுவதுடன் நாட்டில் உள்ள வறுமை அரக்கன் ஒழிந்தபோகவும் உணவில் தன்நிறைவும், மின்சாரம், வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்கும், குடியேற்றம், சுகாதாரம், கல்வி, நாட்டில் சமாதானம் முதலியவற்றில் இலங்கை மற்றைய நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் விளங்கும் என்று கூறினுர்.

அவரைத் தொடர்ந்து நல்லூர் கிராமச்சபைத் தலைவர் திரு. குமாரகுலசிங்கமும் திட்டத்தை விளக்கிச் சிறந்த ஒருஉரை நிகழ்த்தினர்.

மேற்படி பாடசாலை மாணவர்களால் கும்மி, பாட்டு, மகாகவி பாரதியார் நாடகம் சிறப்பாக நடந்தது. அதனைத்தொடர்ந்து திரு. யோ. சிப்பிரியாம்பிள்ளை குழுவினரின் இசைக்கச்சேரியும் நடந்தது. பெற்ருர் ஆசிரிய சங்கச் செயலாளர் பேசுகையில், தலைமை ஆசிரியர் திரு. சு. தம்பாபிள்ளையும் ஆசிரியர் பிரான்சீஸ் சென். ரேச் மற்றும் குழு அங்கத்தவர்களும் இவ்விழாவைச் சிறப்பிப்பதற்குவேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்ததிற்கு நன்றி கூறினுர்.

—

## 40 ஆண்டின்பின் ஓய்வு பெறுகிருர்

அல்லைப்பிட்டி, சனி நாவலர் வழியில் தீவுப் பகுதியில் முதலில் தோன்றிய நூறுண்டுப் பழமையுடைய வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நாற்பது ஆண்டு தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. சு. வைரமுத்து இம் மாத முற்பகுதியில் ஓய்வு பெறுகிருர். இவருடைய சேவையைப் பாராட்டு முகமாக பாராட்டு விழா வொன்றை நடாத்துவதற்கு வேலணை மக்களும், மாணவர்களும், ஆசிரியர்களும் முயற்சி செய்து வருகின்றனர்.

—

## நியமனம்

சங்கானை, வெள்ளி சங்கானை பட்டின சபை 5-ம் வட்டார அங்கத்தவரான திரு. வி. சிவராசா சங்கானை அரசினர்வைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக சுகாதார இலாகாவினுல் நியமிக்கப்பட்டுள்ளார்

# ‘மக்களும், எம். பி. யுமே தரம்உயர்வுக்கு காரணம்’

வல்வெட்டித்துறை, சனி ‘1957-ம் ஆண்டு ‘சி’ வகுப்பாக ஆரம்பக்கப்பட்ட இந்த உப தபாற்கந்தோர் பின்னர் ‘பி’ வகுப்பாகவும் அதன்பின் இம்மாதம் தொடக்கம் ‘ஏ’ வகுப்பாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வுயர்ச்சிக்கு இப்பகுதி மக்களும் தபால்நிலைய அதிபரும் இப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்களும் [illegible] தப்பட்டதற்காக நடந்த விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. கோ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. கே துரைரத்தினம் எம் பி; உப தபாற்கந்தோர் அதிபர் என் விஜயரத்தினம், எம் தம்பிமுத்து, பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சென்ற டாக்டர் சக், சாஸ் ஆயினும் ... திரி மரணம்பற்றி தயா யும்மறைக்கவேண்டுமென்று

# டெல்லி சட்டசபையில் மொழிப்பிரச்னை

## இனிமேல் பொறுக்க முடியாதென தி. மு. க. உறுப்பினர் எச்சரிக்கை

புதுடில்லி, ஏப்ரல் 4

டில்லிசட்ட சபையில் ஜனசங் உறுப்பினர் பெர்வா கேட்ட கேள்வியொன்றுக்கு டில்லி மந்திரி ஷேர்ஷிங் ஆங்கிலத்தில் பதிலளித்தபோது, சபையில் பெரிய அமளிதுமளி உண்டாயிற்று. 'ஆங்கிலத்தில் பதில் கூறவேண்டாம். ஹிந்தியில் தான் பதில்கூற வேண்டும்' என்று திரு. பெர்வா கூறினுர்.

இதைக்கேட்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் எஸ். கந்தப்பன், 'தமிழ் நாடு மற்றும் இந்தி பேசாத மாநில உறுப்பினர்களும் இங்கு இருப்பதால், ஹிந்தியில் பதிலை எதிர்பார்ப்பது முறையல்ல' வென்றுர்.

கந்தப்பன் இப்படிக் கூறியதும், பல உறுப்பினர்கள் 'ஹிந்தியில் தான் பதில் சொல்லவேண்டும்' என கேட்டு கூச்சல்போட்டார்கள்.

''இதுபோன்ற சம்பவங்களை இனி மேலும் பொறுக்கமாட்டோம். மந்திரி ஆங்கிலத்தில் பதில் சொல்லத் தொடங்கிய பின்பு, எதற்காக இந்தியில் பதில் கூறவேண்டும்'' என்று கந்தப்பன் கேட்டார். இந்தச் சபையில் எல்லாவற்றையும் இந்தியில் தான் கூறவேண்டும் என்றவழக்கத்தை ஏற்படுத்த நினைப்பது மிக மிக மோசமாகும் என்றுர்

திரு. கந்தப்பன் சபாநாயகர் இருதரப்பினரையும் சமாதானப்படுத்தி மொழி பற்றி உறுப்பினர்கள் சண்டை போட்டுக்கொள்ளக்கூடாது. இதுநாட்டுக்கு நல்லதல்ல என்றுர்.

## தமிழ் நூல்கள் பிரசுரிக்க தீர்மானம்

கோட்டை, சனி

சிறிலங்கா சாகித்தியமண்டலம் தான் வெளியிடும் சஞ்சிகையான 'சாகித்திய'வை தற்காலிகமாக நிறுத்தி வைத்துவிட்டு தமிழ் எழுத்தாளர்களது ஆக்கவேலைகளை பிரசுரிக்கத் தீர்மானித்துள்ளது

மேற்படி மண்டலத்தின் தலைவரும் வித்தியோதய பிரிவேனுவின் அதிபருமான வனகளுகொண்டயாவ பன்னசேகரமான நாயக்கதேரோவினுல் இத்தீர்மானம் சமீபத்தில் நடைபெற்ற சாகித்திய மண்டலக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டது.

## எக்ஸ்போ-70ல் இலங்கை உணவுக்கு பாராட்டு

கோட்டை, சனி

தற்போது யப்பானில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வதேசக் கண்காட்சி எக்ஸ்போ- 70ல் இடம் பெற்ற சர்வதேச உணவு வகைகளில்இலங்கை உணவிற்கு பெரும் பாராட்டு கிடைத்துள்ளது.

இக் கண்காட்சியில் நியூயோர்க் பத்திரிகையாளரான திரு. கிறெய்க் கிளேயபோர்ன் காட்சியில் வைக்கப்பட்ட பலதேசத்து உணவுகளையும் சுவைத்துப் பார்த்துவிட்டு இலங்கையின் உணவு மிகவும் சுவையாக விருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்,

—

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியரல்லாத ஊழியர் சங்க வட பிரதேசக் கிளையின் ஐந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளைக் காலை நடைபெறவிருக்கிறது யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையிலுள்ள மலாயா இலங்கையர் சங்க மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு திரு. ஜி ஜி பொன்னம்பலம்தலைமைவகிப்பார். சங்கப்பிரதிநிதிகளான திருவாளர்கள் கா மாணிக்கவாசகர், க நவரத்தினம் ஆகியோர் உரையாற்றுவர் எழுத்துமூலம் சங்க உறுப்பினர்கள் சமர்ப்பித்துள்ள பிரேரணைகள் கூட்டத்தில் ஆராயப்படும்,

... கள்வரை ஒப்புக்கொள்ளுகின்றன'' என ஊரைதீவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பிரசாரக்கூட்டத்தில் பேசும்போது பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்தார். திரு. இளையதம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டிதர் தொடர்ந்து பேசுகையில், 'நாம் எந்த நோக்கத்துடன் செயல்பட ஆரம்பித்தோமோ அந்த நோக்கம் நிறைவேறும்வரை தொடர்ந்து போராடியே தீருவோம். நமக்கு பாலங்களோ, அன்றி உத்தியோகங்களோ தேவையில்லை உரிமைகள் தான் தேவை என்றுர்.

செனட்டர் திரு. எஸ். நடராசா பேசுகையில், ''இலங்கையின் வரலாற்றிலே கடந்த ஐந்தாண்டுகளில் தமிழரசுக்கட்சி அளப்பரிய சேவையினைச் செய்துள்ளது. இந்த ஐந்துவருட காலத்தில் தமிழ்மொழியைச் சிங்கள மொழியுடன் சம உரிமையுடையதாக்கியுள்ளது முன்பு எமது கட்சியினர் சத்தியாக்கிரகம். சட்ட மறுப்பு இயக்கம் என்பவற்றைச் செய்து இரண்டு மாத காலம் ஆட்சியாளரைத் ... நாம் தயாராகஇருக்கவேண்டும்'' என்றுர். திருவாளர்கள் என் கே தர்மலிங்கம், க திருநாவுக்கரசு, சுப்பிரமணியம், இராமகிருஷ்ணன் உட்பட வேறுபலரும் உரையாற்றினுர்கள்.

## தலைமைஆசிரியர் இல்லை

கொடிகாமம், வெள்ளி

எழுதுமட்டுவாள் - வடக்கைச் சேர்ந்த மருதங்குளம் பகுதியிலுள்ள அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் சுமார் ஒன்றரை வருடமாகத் தலைமையாசிரியர் இல்லாமல்இயங்கிவருகிறது. அங்கு பணிபுரியும் ஆசிரியரொருவரே தலைமையாசிரியரின் பொறுப்பை ஏற்று நடத்துகிருர்.

தேசிய அரசாங்கம்

## இன ஒற்றுமைக்கு அடிகோலியது

பொல்காவலை, சனி

கூட்டணிக்கட்சிகள் தங்கள் பிரசாரக்கூட்டங்களில் 'நாம் வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பளிப்போம். மக்கள் தற்போது இழந்துள்ள 1 படி பங்கீட்டரிசியையும் சேர்த்து அவர்களுக்கு 2 படி அரிசி வழங்குவோம்' எனக்கூறுகிருர்கள். ஆனுல் 21 அம்சக்கோரிக்கைகளுக்கு என்ன நடந்தது என்பதையும் வில்மட் பெரேரா சம்பளகமிஷன் அறிக்கைக்கு என்ன நடந்ததென்பதையும் பொதுமக்கள் அறிவர்.

பொல்காவலையில் நீர்விநியோகத் திட்டமொன்றிற்கு அடிக்கல் நாட்டிய உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில், தேசிய அரசாங்கம் பதவிக்குவந்த போது இனமத பூசல்கள் நாட்டில் காணப்பட்டன. இதனுல் மக்கள் வீதியில் நடமாட அஞ்சினர். தேசிய அரசாங்கத்தினுல் இந்நிலைமை மாற்றியமைக்கப்பட்டுவிட்டது. சகல இனத்தவர்களும் வேறுபாடின்றி ஒற்றுமையாக வாழவழி செய்ததே தேசிய அரசாங்கமாகும் எனக் குறிப்பிட்டார்.

—

கோட்டை, சனி

சிவனெளிபாத யாத்திரீகர்களுக்கு பிரயாண வசதி செய்யுமுகமாக புகையிரதப் பகுதி விசேஷ புகையிரத சேவைகளை ஒழுங்குசெய்துள்ளது.

## ... முதலிடம்


ஊர்காவற்றுறை, சனி

யாழ்ப்பாண மாவட்ட உடற்பயிற்சிப் போட்டியில் கீழ்ப்பிரிவில் ஆண்களில் முதலாம் இடத்தை நாரந்தனை றே. க. ஆண்கள் பாடசாலை பெற்றுள்ளது.

வடமாநில வித்தியாதிபதி வெற்றிக் கிண்ணத்தையும், சான்றிதழையும் வழங்கினுர்

... பின்னர் 'பி' வகுப்பாகவும் அதன்பின் இம்மாதம் தொடக்கம் 'ஏ' வகுப்பாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வுயர்ச்சிக்கு இப்பகுதி மக்களும் தபால்நிலைய அதிபரும் இப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு. கே. துரைரத்தினத்தின் ஒத்துழைப்புமே இதற்குக் காரணமாகும்' என்று வடமாநில தபால் அதிபர் திரு. எம். நடராசா நெல்லண்டை உபதபாற்கந்தோர் தரம்உயர்த்... வாறு கூறினுர்.

திரு. கோ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. கே. துரைரத்தினம் எம் பி; உபதபாற்கந்தோர் அதிபர் என் விஜயரத்தினம், எம் தம்பிமுத்து, பருத்தித்துறை நகரசபைத்தலைவர் வ தருமலிங்கம், செ தங்கவடிவேலு இராஜ் சுப்பிரமணியம், வ கமலநாதன், க சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் பேசினர். கடைசியில் இசைவிருந்தும் அளிக்கப்பட்டது.




## இந்தியாவுக்கு ஏற்றது சமஷ்டி முறையே

### பேராசிரியர் முகர்ஜி கருத்து

புதுடில்லி, ஏப்ரல் 4

இந்தியா போன்ற பெரிய நாடுகளுக்கு சமஷ்டி அரசியலமைப்பு முறையே சிறந்தது என்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ) பெருந் தலைவர்களுள் ஒருவரான பேராசிரியர் ஹிரேன் முக்கர்ஜி கருத்துத் தெரிவித்தார்

மத்திய-மாநில உறவுகள் பற்றிய மூன்று நாள் மாநாடொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பேராசிரியர் ஹிரேன் முக்கர்ஜி மேற்கண்டவாறு தெரிவித்தார்

இந்திய உதவி ஜனதிபதி திரு. ஜி. எஸ் பதக்கால் ஆரம்பித்துவைத்த இம்மாநாட்டில் இந்தியாவின் எல்லா அரசியற் கட்சியைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றி மத்திய-மாநில அரசுகளின் உறவுமுறை பலப்பட வழிமுறைகள் பற்றி கருத்துத் தெரிவித்தனர்.

திராவிட முன்னேற்றக் கழக எம் பி திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், மாநில அரசுகளுக்கான அதிகாரங்கள் அதிகமாக்கப்பட்ட, சமஷ்டி அரசியல் முறைதான் சாலப் பொருத்தமானதாகும் என வலியுறுத்தினுர்

ஜனசங்கக் கட்சி உறுப்பினர், இந்தியாவில் இன்றைய அரசியல் நிலையில் வலிமைமிக்க மத்திய அரசுடன் கூடிய ஒற்றையாட்சிமுறைதான் நன்மைபயக்கக்கூடியது என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினுர்.


புதுவருடப்பிறப்பை முன்னிட்டு
ஏராளமான
ஜவுளி வகைகளை வரவழைத்திருக்கிறேம்.
மிகவும் மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் தேவைகளை பூர்த்திசெய்ய விஜயஞ் செய்யுங்கள்.
செ. காசிப்பிள்ளை அன் கோ.,
82, காங்கேசன்துறை வீதி [போன்: 506] யாழ்ப்பாணம்.
கிளை: சி. கே. பி. 74/8, பெரியகடை யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எப்போதும் செயலாற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். வேலையின்றி ஒருபோதும் இருத்தலாகாது. ஏனெனில் செயல் அற்ற சோம்பல் நிலையில் எவ்வகைக் கெட்ட எண்ணங்களும் மனதில் உதிக்கும். — ராமகிருஷ்ணபரமஹம்சர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 23-ந் திகதி (5-4-70)

## ஆட்சிமன்றமும் வேலையின்மையும்

இந்திய ஆட்சிமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் இந்தியாவில் வேலையில்லாப் பிரச்னை பற்றி நேற்று விவாதம் நடைபெற்றது. வேலையின்மைப் பிரச்னையை எப்படித் தீர்க்கலாம் என்பது பற்றி உறுப்பினர்கள் பலரும் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர். ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் இந்தக் கருத்துக்களை ஏற்கலாம்; ஏற்காதுவிடலாம். ஆனாலும் நல்ல யோசனைகள் தெரிவிக்கப்பட்டால் அவற்றை ஏற்றுச் செயற்படுத்துவது அறிவுடமை. செயல்படுத்தத் தவறியிருந்தால் மற்றொரு சந்தர்ப்பத்தில் உறுப்பினர்கள் தட்டிக்கேட்க முடியும். அடுத்த தேர்தலில் இதை முன்வைத்து மக்கள் முன் எடுத்துச் கூறும் பொழுது ஆளும்கட்சியினர் பதில் சொல்லமுடியாத நிலையும் ஏற்படலாம். சிறந்த யோசனைகள் எங்கிருந்து வந்தாலும் நாட்டின் நன்மையைக் கருதி அவற்றைச் செயல்படுத்த வேண்டியது அறிவுடைய அரசின் கடமை.

நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வேலைவாய்ப்புத் தேடித்தரும் தொழிற்கந்தோர்களில் பதிவுசெய்துள்ளோரின் தொகை இலட்சக்கணக்கிலுள்ளது. அரசாங்கமும் ஏதேதோ திட்டங்கள் போடுகின்றது; என்னென்னவெல்லாமோ செய்யப்போவதாகச் சொல்லியது. திரு. டட்லியின் தேசிய அரசாங்கம் மட்டுமல்ல இதற்குமுன் ஆட்சிபீடத்திலிருந்த அரசாங்கங்களும் வேலையின்மைப் பிரச்னைக்கு ஒரு முடிவுகாணப் போவதாகத்தான் சொல்லி வந்தன. தேர்தல் சமயத்தில் உறுதியளிப்பதும், தேர்தல் முடிந்து ஆட்சிபீடத்திலமர்ந்ததும் அவற்றை மறந்துவிடுவதும் வழக்க

அப்போதைய பிரதமரான திருமதி சிறிமா பண்டாரநாயகா அன்றைய எதிர்க்கட்சித் தலைவரான திரு. டட்லி சேனநாயகாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர் கருத்தை அறிந்துகொள்ள முடியுமானால், தேசீய அரசாங்கம் ஆட்சிக்குவந்ததும் வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை மூடவேண்டுமென்று தமிழ்ப் பிரதிநிதிகள் கோரியபோது அதற்கு இடம் கொடுக்கக்கூடாதென்று திருமதி சிறிமா தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பிரதமரைச் சந்தித்து கேட்டபோது அதற்கு அவர் ஒப்புக்கொள்ள முடியுமானால் நாட்டின் முக்கிய பிரச்னையான, தேசீயப் பிரச்னையான வேலையில்லாப் பிரச்னைக்கு இந்தத் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து தேசீயரீதியில் ஒரு தீர்வு கண்டிருக்கமுடியாதா?

இந்தியாவில் கட்சிவேறுபாடுகள், கொள்கைவேறுபாடுகள் எத்தனையிருந்தாலும் வேலையில்லாப் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாணுமுகமாக ஆட்சிமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் விவாதித்திருக்கிறார்கள், அதன் முடிவு எப்படியிருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை. நமது நாட்டில் ஆட்சிமன்றத்தின் மக்கள்பிரதிநிதிகள் சபையிலாயினும் சரி, மேல்சபையான செனட்சபையிலாயினும் சரி கடந்த ஆண்டுகளில் வேலையில்லாப்பிரச்னை பற்றி தனியாகச் சில தினங்களை ஒதுக்கி விவாதித்ததாகவோ, உறுப்பினர்கள் இப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான யோசனைகளைத் தெரிவித்ததாகவோ சொல்ல முடியாது.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போதும், சிம்மாசனப்பிரசங்கத்துக்கும் நன்றிதெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தின்

ஆட்சிமன்றத்தில் சாதித்தது என்ன?—2

# அரசாங்கம் அமைக்க தமிழரசாரிடம் இப்போதே ஆதரவு கேட்கிருர்கள்!

## டாக்டர் நாகநாதன் கூறுகிருர்

இப்பேட்டியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விஷயங்கள் குறித்து டாக்டர் நாகநாதனிடம் கேள்விகள் கேட்க விரும்பும் எமது வாசகர்களுக்கு அவர் 'ஈழநாடு' மூலம் பதிலளிக்க இசைந்துள்ளார். கேள்விகளை 11-4-70-க்கு முன்னர் எமக்கு அனுப்பிவையுங்கள்.

நல்லூர் எம் பி- மன்னிக்கவும்-முன்னைநாள் எம் பி டாக்டர் நாகநாதன், பழுத்த அரசியல் வாதி; வயதாலும் அனுபவத்தாலும் முதிர்ந்தவர்; 'இரும்பு மனிதர்' என்று பட்டம் பெற்றவர்; மனதிற்குப் பட்டதை பட்பட்டென்று பட்டவர்த்தனமாகச் சொல்லிவிடுவார் இப்படி வெள்ளை மனதுடன் பேசுவதால் கட்சிக்குள்ளும் வெளியிலும் பலரின் கசப்பையும் சம்பாதித்துக் கொண்டுள்ளவர்.

கசப்பான மருந்து கொடுத்தாலும், நோய் தீர்ப்பது தான் டாக்டரின் கடமையாதலால் இந்நாட்டில் சிறந்த டாக்டர்களின் வரிசையிலே வைத்தெண்ணப் படத்தக்க டாக்டர் நாகநாதனும், கசப்பான உண்மைகளைத் தயங்காமல் கூறுவதில் முதலிடம் பெறுபவர்

ஆட்சிமன்றத்திலே திரு. அமிர்தலிங்கத்துக்குஅடுத்து தமிழரசுக்கட்சி எம். பி. களில் டாக்டர் நாகநாதனின் குரலைத்தான் அடிக்கடி கேட்கமுடியும்: ஆங்கிலத்தில்தான் பேசுவார் ஆனால் ஆணித்தரமாக அனைவரையும் சாடுவார்; பலவேளைகளில் உணர்ச்சிவசப்பட்டவராய் எடுத்துக்கொண்ட பொருளை விட்டுவிட்டு எங்கேயோ போய் விடுவார்; இது டாக்டர் நாகநாதனின் 'சிறந்த' குணதிசயங்களில் ஒன்று. இதனால் குறிப்பிட்ட கேள்விகளுக்குத்தக்க பதில்களை-நேரடியான பதில்களை டாகடரிடமிருந்து பெறுவதென்பது சற்று சிரம சாத்தியமான காரியம்தான் ஆனாலும், டாக்டரிடம்பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாது.

இந்தக் கட்டுரைக்காக டாக்டரைப் பேட்டி காண அவரது இல்லத்துக்குச் சென்றபோதும் இந்த அனுபவம்தான்எனக்கும் கிடைத்தது.

### தம்பியைப் பற்றி தமக்கையார்!

நானும் நண்பர் கோபுவும் அங்கு சென்றபோது மாலை

வசைமாரி ஆம், வசைமாரி பொழியத் தொடங்கினர்.

### கொக்குவில் கோண்டாவில்

கொக்குவில், கோண்டாவில் கிராமசபைகளின் ஊழல் நிறைந்த நிர்வாகத்தைப்பற்றி ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப் படித்த போது, தமிழன்என்றமுறையில் தான் வெட்கித்தலை குனிந்ததாகச் சொன்ன டாக்டர், சீர்கேடான நிர்வாகத்தால் பொதுமக்களின் பணம் விரையமடிக்கப்பட்டதோடு, குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மான்யத் தொகையெல்லாம், அந்தக் குறிப்பிட்ட திட்டங்களைச் செயல்படுத்தப் பயன்படுத்தப்படாமல் வேறு அர்த்தமில்லாச் செலவுகளில் வீணடிக்கப்பட்டுவிட்டதாக ஆத்திரத்துடன் விளாசித் தள்ளினர்.

நான் முன்பே குறிப்பிட்டபடி கேள்விக்கான நேரடி பதிலைப் பெறுவது எப்படி என்று மண்டையைகுழப்பிக் கொண்டிருந்த வேளையில், நல்ல வேளையாக அங்கிருந்த யாழ் நகரசபை உறுப்பினர் திரு. அந்தோனிப்பிள்ளை குறுக்கிட்டுக் கைகொடுத்து உதவினர்.

''ஐயா நல்லூர் தொகுதியில் பாடசாலைகள் கட்டி முடித்திருப்பதை எண்ணற்றோருக்கு வேலை தேடிக் கொடுத்திருப்பதைச் சொல்லுங்கோ ஐயா! உங்களுக்குச் சொல்லக் கூச்சமாக இருந்தால் சொல்லுங்கோ. நாங்கள் சொல்லுறம்... ஆட்சியாளரிடம் ... யிட்டு அதற்கு மானியம் ...

த்ததாகவும், அவருடைய உதவியால்தான் தங்கள் குடும்பமே கஞ்சித்தண்ணீர் குடிக்கிறதை நன்றியுடன் எடுத்துக்கூறிய கதையையும் கட்டவிழ்த்து விட்டார்-

'நான் நல்லூரைமட்டும் நினைத்துக் கொண்டிருக்க முடியாது: நான் தமிழினத்தைக் காப்பாற்றுவதற்காக தமிழ் மொழியை, தமிழ்க் கலையை, தமிழ்க் கலாச்சாரத்தை, தமிழர்களின் ஆங்காரத்தை... (கௌரவத்தை என்று ஒரு ஆதரவாளர் திருத்துகிருர்) தம்: ஆங்காரம் இருக்கத்தான் வேண்டும். தமிழன் தலை நிமிர்ந்து கர்வத்துடன் நடக்கவேண்டும்-இவற்றைக் காப்பாற்றுவதற்காகத்தான் நான் உழைக்கிறேன்' என்று பொரிந்து தள்ளியதோடு எழுந்து நின்று என்னை நோக்கி முன்னேறி வந்தார்.

### பொன்னம்பலம் தலையிட்டார்

'பொன்னம்பலம் மாத்திரம் நல்லூர்த் தொழில் நுட்பக்கல்லூரி விஷயத்தில் தலையிடாதிருந்திருந்தால், இந்நேரம் அதனை, மருதானை தொழில்நுட்பக் கல்லூரிக்கு இணையாகத் தரமுயர்த்தியிருப்பேன். இந்தத் தொழில் நுட்பக்கல்லூரிக்கென 25 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தலையிட்டு, அச்சுவேலியில்தான் தொழில்நுட்பக்கல்லூரி நிறுவப்படவேண்டும் என்று சொன்னதால், அந்தவேலை அப்படியே தடைப்பட்டுநிற்

### பொ. சுந்தரலிங்கம்

ப: அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்கக் கூடாது என்று தமிழரசுக்கட்சி கூறியது உண்மை. 1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதா கொண்டுவந்ததும் தமிழ்மக்களின் தன்மானத்தைப் பாதுகாக்க சிங்களம் படிக்க வேண்டாமென்று சொன்னேம். 1956-ம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்க சேவையில் சேர்ந்த பழைய அரசாங்க ஊழியர் மட்டுமல்ல 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் சேர்ந்த அரசாங்க ஊழியரும் சிங்களம் படிக்க வேண்டாமென்று சொன்னேம்.

1965-ம் ஆண்டில் எங்கள் ஒத்துழைப்புடன் திரு. டட்லியின் தலைமையில் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் தமிழ்மொழி சட்ட (விசேஷ) விதிகள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இதன்படி வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் ஆட்சி மொழியாக சமஅந்தஸ்துப் பெற்றது. இதனல் புதிய அரசாங்க ஊழியர் சிங்களம் படிக்கலாமென்று சொன்னேம்.

என்றாலும் நாங்கள் சொன்னபடி சிங்களம் படிக்காத புதிய அரசாங்க ஊழியர் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்கு இரண்டு தடவை மூன்று வருடகால அவகாசம் பெற்றுக் கொடுத்தோம், இதுதவிர புதிய அரசாங்க ஊழியர் அரசாங்க சேவையில்சேரும் பொழுது சிங்களத்தில்



தேர்ச்சி பெறுவதற்கு ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டுத்தானே சேர்ந்தார்

## தமிழ் மக்காள் ஒன்று சேரீர்!

தருமவாழ் வதனைச் சூது
தாழ்வுசெய் வஞ்சங் கண்டீர்
அருமையாம் அறமே யன்றி
ஆருயிர்க் குறுதியுண்டோ?
கருமயோ கத்தைச் செய்து
காசினி உய்தல் வேண்டும்
பெருமைசால் தமிழைப் பேண
பெருந்தகைப் பெரியீர் கூடீர்!

தமிழ்மொழி மரபின் மேன்மை
தழைத்திடத்தரணி மீது
நமதுநல் வீரம் மானம்
நசிவுறு துரிமை யோங்க
எமதுயர் சக்தி யோங்க
எழுகநீர் அப்போ வானேர்
அமிழ்தெனும் தமிழே இங்கு
ஆக்கமே கொள்வான் ஓங்கி

சிங்களம் தனித்து வாழ
சேர்ந்ததாம் எஸ். எல். எப். பி.
சிங்களர் ஒன்று சேர
திகழுமாம் யூ. என். பீயே
எங்களின் மானம் இன்னுள்
எம்மினப் பிரிவால் மாள
இங்குநாம் வாழ லாமா
எழுகநீர் உணர்ச்சி ஊற்றே!

சிறக்குக சிறந்த தாகித்
திகழுமெம் ஆசியாவின்
அறங்களே தெய்வம் ஒன்றும்
அருங்கருத் துணர்வில் ஓங்கப்
பிறக்கவே வேண்டும் தேசம்
பெட்புறச் சன்மார்க் கங்கள்
அறத்துடன் இணைந்த வாழ்க்கை
ஆகுமாம் மிடிமை போகும்.

உய்திடும் வகையிதாகும்
உலகிலே ஆட்சிக் காக
செய்திடு வோர்கள் வஞ்சம்
சீரிலா உபாயம் சாக
மெய்ம்மையாம் கல்வி மேன்மை
மேவிட வேண்டு மென்றே
வையக மீதில் வண்மை
மருவிடும் வாழ்வு காண்போம்.

காடுறை விலங்க தாக
காலமே கழிக்க வேண்டாம்
நாடுவாழ் வோங்க வேண்டும்
நல்லவர் மதிக்க இங்கே
ஊடுறை ஊனம் புன்மை
ஒழிந்துயர் உரிமை கொள்ள
பீடிலே பிறந்த நீயே
பெட்புற எழுக இன்றே

சாதியோ டின்னல் காட்டும்
தகவிலா வீண ராகி
பூதல மீது புன்மை
பொருந்திடும் வாழ்வு வேண்டாம்
நீதியோ டுயர்ந்த நேர்மை
நிலைபெற நெறியோ டொன்றி
ஏதமில் லாத வெற்றி
எமக்குற எழுக நீவிர்

பாரிலே தமிழன் முன்னுள்
பலத்துடன் நிமிர்ந்து பண்பின்
வேரிலே வெற்றி கண்டான்
வீணரின் மதியால் முன்னுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் வேலையின்மைப் பிரச்னைக்கு ஒரு முடிவுகாணப் போவதாகத்தான் சொல்லி வந்தன. தேர்தல் சமயத்தில் உறுதியளிப்பதும், தேர்தல் முடிந்து ஆட்சி பீடத்திலமர்ந்ததும்அவற்றை மறந்துவிடுவதும் வழக்கமாகிவிட்டன. ஆட்சிபீடத்தில் அமரும் வாய்ப்புக் கிடைக்காமல் போனதும், 'எங்களை ஆட்சிபீடத்தில் அமர்த்தியிருந்தால் நாங்கள் சொன்னபடி வேலையின்மையைப் போக்கியிருப்போம்' என்று கூறுவதும் சகஜம்தான்.

வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு கட்சியின் பிரச்னையோ, அரசாங்கத்தின் பிரச்னையோ மட்டுமல்ல, இது ஒரு தேசியப் பிரச்னை இதற்குக் தேசியரீதியில் தீர்வுகண்டிருக்கலாம்; இனியும் கூட இந்த முறையில் தீர்வுகாணலாம். இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் சம்பந்தமாக டில்லியில் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தத்தில் கைச்கைச்சாத்திடுவதற்கு முன் மான யோசனைகளைத் தெரிவித்ததாகவோ சொல்ல முடியாது.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தின்போதும், சிம்மாசனப்பிரசங்கத்துக்கும் நன்றிதெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தின் போதும் வேலையில்லாப் பிரச்னைபற்றி எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தின்மீது குறைகுற்றம் சொல்லியும் ஆளும் கட்சித் தரப்பிலுள்ளவர்கள் அதைத் தொட்டுக்காட்டி ஏதோ சமாதானம் கூறியும் அந்தந்த நேரத்தை சமாளித்திருக்கின்றனரேயொழிய வேலையில்லாப் பிரச்னைக்கு ஒரு முடிவுகாண்பதற்கான யோசனைகளைக் கேட்கவும், தெரிவிக்கவும், நல்லதை ஏற்றுச் செயல்படுத்தவும் ஆட்சிமன்றத்தில் முற்றுமுழுதாக விவாதம் நடைபெறவில்லை.

வேலையில்லாப் பிரச்னை ஒரு தேசியப் பிரச்னை. இனியாவது இதற்குத் தேசியரீதியில் தீர்வுகாண கட்சிவேறுபாடின்றி முயற்சிசெய்வார்களா?

## விளையாட்டுபோட்டி

வல்வெட்டித்துறை, சனி

பருத்தித்துறை காரியாதிகாரி பிரிவுக்கான விளையாட்டுப் போட்டி புதுவருட தினத்தையொட்டி இம்மாதம் 13,14-ந் திகதிகளில் பருத்தித்துறை கடற்கரைமைதானத்தில் நடைபெற விருக்கிறது.

## ஆசிரிய சங்கப் பேச்சுப் போட்டி

உரும்பராய், சனி

வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கச் சார்பிலான பேச்சு, கட்டுரை திறனாய்வுப்போட்டிகள் இம்மாதம் 6-ம் திகதி முற்பகல் வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலயத்தில் நடைபெற இருக்கின்றன.


## விற்பனைக்கு

வட்டுக்கோட்டைக்கு அருகாமையில் இருக்கும் திக்கிராய்க் குளத்தடியில் இருக்கும் பனையடைப்பும், நெற்காணியும் சேர்ந்த பரப்பு 24. அடைக்கலந் தோட்டம்கந்தசுவாமிகோவிலுக்கு அருகாமையிலுள்ள கட்டிடத்தோடுகிணறும்அடங்கிய 4 பரப்பு, சங்கரத்தை சங்கத்தாபுலம் பரப்பு 13 1/4 பனையடைப்பு, சங்கரத்தை புதவயல் பரப்பு 12 1/2 நெற்காணி, சங்கரத்தை குதிரைப்பிட்டி 12 நெற்காணி, யாழ்ப்பாணம் கே. கே. எஸ், ரோட், தட்டாதெருச் சந்தியிலிருந்து உள்ளுக்குள் 25 யாரில், உள்ள வளவு 4 பரப்பும், 6 குழியும். கிணறும், வான்பயிரும் உள்ள காணி. தொடர்பு கொள்ளவும். திருமதி என். நடராசா, 49, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 12-4-70 மேல் திருமதி என். நடராசா, 16, அல்பிறட் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. 2019


## மரண அறிவித்தல்

டாக்டர் ஆர். சிவகடாட்சம்

சத்தியபாமாவின் அன்புக் கணவரும் பிருந்தாவின் தந்தையும் காலஞ்சென்ற திரு, கே, இராசநாயகம் அவர்களதும் திருமதி இராசநாயகம் அவர்களது புத்திரரும் ராணி, மணி ஆகியோரின் சகோதரரும் யாழ்ப்பாணம் வழக்கறிஞர் திரு. எஸ். செல்வராசாவின் மருமகனும், சரவணமுத்து (இலங்கை வங்கி, கொழும்பு) நித்தியானந்தன் (சிவம்ஸ்டோர்ஸ்கொழும்பு) நளாயினி, ஸ்ரீகாந்தா ஆகியோரின் மைத்துனருமாகிய டாக்டர் ஆர். சிவகடாட்சம் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

32/1, அலன் அவனியு,
2103 தெஹிவளை.

சென்றபோதும் இந்த அநுபவம்தான்எனக்கும் கிடைத்தது.

## தம்பியைப் பற்றி தமக்கையார் !

நானும் நண்பர் கோபுவும் அங்கு சென்றபோது மாலை 3மணி: டாக்டர் வோட்டு வேட்டையில் ஈடுபட்டு விட்டுக்களைத்துப்போய்கண்ணயர்ந்து இருப்பதாக அவரது தமக்கையார் திருமதி ஒகலசேகரம்கூறி டாக்டர் துயிலெழுந்து வரும்வரை தான்பெற்ற இன்பம் நாங்களும்பெற வேண்டுமென்று தம்பி நாகநாதனின் மக்கள் சேவையைப்பற்றியும் தமிழினத்திற்கு அவர் ஆற்றியுள்ள தொண்டுகளைப்பற்றியும், மாதாந்தம் பலஆயிரக்கணக்கான வருமானமுள்ளவைத்தியத் தொழிலை உதறித் தள்ளியதைப் பற்றியும் தனக்குப்பட்டதைச் சொல்லிக் கொண்டிருந்தார்

சுமார் 15 நிமிடங்களில் டாக்டர் எழுந்து வந்தார்: அதற்குள்ளாக அவரது ஆதரவாளர்கள்; அவருக்காக வோட்டு வேட்டையில் ஈடுபட்ட வாலிபர் கூட்டத்தினர் அன்றைய கூட்டத்திற்கும் அடுத்தநாள்கூட்டத்திற்கும் ஏற்பாடுகள் செய்ய வந்திருந்த பிரசார பீரங்கிகள்- இப்படியாகபதிந்து. இருபது பேர் அவரைக்காண்பதற்காக வந்து மொய்த்து நின்றனர்' தேர்தல் காலங்களில் ஆதரவாளர்களுக்கு வழிவிட்டு நின்ருல் நமதுகாரியம் நடைபெருது என்று முதலில் வந்தவன் உரிமையில் மற்றவர்கள் டாக்டரைப் புடைசூழ நிற்க எனது பேட்டியை ஆரம்பித்தேன்,

### ஐந்தாண்டுகால சாதனைகள்

''டாக்டர் உங்கள் தொகுதிக்கு கடந்த ஐந்தாண்டு காலத்தில் என்னென்ன சேவைகள் செய்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

எனது கேள்வி புரியவில்லையோ, செய்து முடித்த எத்தனையோ காரியங்களில் எதனைச் சொல்வது என்ற திகைப்போ தெரியவில்லை, ''இதைத்தான் கேட்க வந்தீரோ? என்று கேட்டார்.

'ஆமாம்' என்றவுடன் ''எனது நல்லூர்த் தொகுதியில் பல உள்ளூராட்சி அமைப்புகளிருக்கின்றன ஒரு பகுதி யாழ். நகரசபைக்கு உட்பட்ட பகுதி எனவே இந்த உள்ளூராட்சிஅமைப்புகள்தான் அந்தந்தப்பகுதிக்குத் தேவையான அபிவிருத்தியைச் செய்யவேண்டும்'' என்று ஆரம்பித்து நல்லூர் தொகுதிக்குள் வரும் சில உள்ளூராட்சி அமைப்புகளின் சீர்கேடான நிர்வாகத்தைப்பற்றி குறிப்பாக கொக்குவில், கோண்டாவில் இராமசபைகளைப்பற்றி கொடுத்திருப்பதைச் சொல்லுங்கோ ஐயா! உங்களுக்குச் சொல்லக் கூச்சமாக இருந்தால் சொல்லுங்கோ. நாங்கள் சொல்லுகிறோம். ஆட்சியாளரிடம் சண்டையிட்டு அதற்கு மானியம் பெற்றிருக்கிறேன் இதற்கு மான்யம்பெற்றிருக்கிறேன். சில வற்றிற்கும் முயற்சிகள் வேலைகள் நடைபெறுகின்றன என்று சொல்லுங்கோவன் என்று அடியெடுத்துக் கொடுத்து, எப்படிச் சொல்லவேண்டும் என்பதற்கு உதாரணமாக யாழ்ப்பாண எம்-பி. தனது கடந்த கால சேவைகளைப்பற்றி வெளியிட்டுள்ள ஒரு துண்டுப் பிரசாரத்தில் காணப்படுவைகளை வெகு சிலேடையாகச் சுட்டிக்காட்டினார்.

திரு. அந்தோனிப்பிள்ளை அடியெடுத்துக கொடுத்துத்தவுடன் ஒருபிடி பிடித்தார் டாக்டர். ''ஆனந்தா வித்தியாசாலை, தட்டாரத்தெரு பாடசாலை உயரப்புலம் குளங்கரைப் பாடசாலை, இவற்றிற்கெல்லாம் புத்தம் புதிதாகக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. இந்த பாடசாலைகளுக்கு மட்டுமல்லாமல், வேறுபல பாடசாலைகளுக்கும் தேவையான தளபாடங்கள் ஏராளமாகக்கிடைக்க வழி செய்திருக்கிறேன்'' என ஆரம்பித்து, 'இன்னும் எவ்வளவோ செய்து முடித்திருப்பேன்: ஆனல் இங்கேயுள்ள உதவிக் கல்வி அதிபருக்கு என்னைப் பிடிக்காது. எனவே, எனது தொகுதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள எவ்வளவோ நிதியைத் தக்க முறையில் செலவழிக்காது திருப்பியனுப்பியுள்ளார்' என்று முடித்தார்.

'நான் எவ்வளவோ எனது தொகுதிக்காகச்செய்திருக்கிறேன். எனக்கு, கட்சி ஆதரவாளன், எதிர்ப்பாளன் என்று வித்தியாசம் எள்ளளவும் கிடையாது. நான் நல்லூர்த் தொகுதி முழுமைக்கும் தான் எம். பி. யேதவிர, எனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டும் எம். பி. யல்ல. நான் செய்ததையெல்லாம் மறந்து விடுகிறேன், செய்யவேண்டியதைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்', என்று தொடர்ந்தபோது, ஆதரவாளர் பெருங்கூட்டத்தில் நின்ற ஒரு அன்பர் இடைமறித்து, 'ஐயா எங்கள் ஆட்களுக்குச் செய்ததைவிட எதிர்த்தரப்பு ஆட்களுக்குத்தான் அதிகமாக உதவி செய்திருக்கிறார்: வேலைகள் தேடிக் கொடுத்திருக்கிறார் என்று சொல்லியதோடு நிற்காமல், ஐயாவுக்காக வோட்டு வேட்டையில் சென்றபோது, எங்கோ ஓரிடத்தில், யாரோ இருவர் தங்களுக்கு டாக்டர் ஐயா தான் வேலைதேடிக் கொடு சொன்னதால், அந்தவேலை அப்படியே தடைப்பட்டுநிற்

### பெரி. சுந்தரலிங்கம்

கிறது' என்று குறைப்பட்டுக் கொண்ட டாக்டர், திடீரென ஆவேசம் வந்தவர் போல், 'இந்த ஜி ஜி பொன்னம்பலம் தனது தொகுதிக்குச் செய்ததைவிட இரண்டு மடங்கு அதிகமாக நான் என் தொகுதிக்குச் செய்திருக்கிறேன். இதுபற்றி பாரபட்சமற்ற கமிஷன்வேண்டுமானாலும் நியமித்து விசாரணை செய்யலாம்' என்று கொட்டி முழங்கினார்.

இப்படியே விட்டுககொண்டிருந்தால் பேட்டி முடிந்தபாடாகாது என்பது எனக்குத் தெளிவாயிற்று. டாக்டர் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அங்கிருந்த ஆதரவாளர்களும் அன்பர்களும் அடிக்கடி குறுக்கிட்டு டாக்டருக்கு உதவியாக, விளக்கங்களும், விபரங்களும் கொடுத்துக்கொண்டிருந்தது வேறு, எனது வேலையை மேலும் சிரமமாக்கியது.

எனவே, குறிப்பிட்ட சில கேள்விகளுக்கு மட்டும் பதிலைப்பெற்றுக்கொண்டுபேட்டியைச் சுருக்கிககொள்ள நினைத்து, 'தமிழ் எம் பி.க்களின் உதவியில்லாமலேயே அரசாங்கம் அமைப்பது பற்றித்தான் இப்பொழுது இந்நாட்டிலுள்ள இரு பெரும் அரசியல் கட்சிகளான யூ. என் பி யும், எஸ் எல் எவ் பி யும் சிந்திப்பதால் தமிழரசுக் கட்சியின் எதிர்கால அரசியல்திட்டம் என்னவாக இருக்கும்' என்றுவிளக்கம் கேட்டேன்


'உமக்கு ஒன்று சொல்கிறேன்: பெயர்களைக் குறிப்பிட விரும்பவில்லை. ஆனல் யூ என் பியையும், எஸ் எல் எவ் பியையும் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் பலர் இப்பொழுது என்னோடு பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள்,

கே: எதைப்பற்றிப் பேசினீர்கள்?

### உதவிகோரி வந்தனர்

ப: எதிர்காலத்தில் அரசாங்கம் அமைக்க எங்களுடைய உதவியைக் கோரித்தான் அவர்கள்வந்தார்கள். எனவே எதிர்காலத்தில் எங்கள் உதவியில்லாமல் அவர்களால் அரசாங்கம் அமைக்க முடியும் என்பதெல்லாம் சரியல்ல.

கே: அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டாமென்று தமிழரசுக்கட்சி சொன்னதைக் கேட்டு சிங்களம் படிக்காதிருந்த ஊழியர்களைத் தமிழரசுக்கட்சி கைவிட்டுவிட்டதாகச் சொல்லுவது சரியா?



ப: தேர்ச்சி பெறுவதற்கு ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டுத்தானே சேர்ந்தார்கள்.

கே: புதிய அரசாங்கஊழியர் சிங்களம் படிக்கலாமென வெளி வெளியாகச் சொன்னீர்களா?

ப: 1965-ம் ஆண்டில் தமிழ் மொழிச் சட்ட (விசேஷ) விதிகள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட பின் சொன்னேம்.

### சிங்களம் படிக்கட்டும்

கே: புதிய தமிழ்அரசாங்க ஊழியர் சிங்களம் படிப்பதை தமிழ்அரசுக்கட்சி ஏற்றுக்கொள்கிறது. அப்படித்தானே?

ப-ஆம்!

கே தமிழ்க் காங்கிரசும் எதிர்க்கவில்லை என்பது சரியா?

ப அப்படித்தான்

கே: அரசாங்க ஊழியர் மட்டுமல்லாது தமிழ்ப்பிள்ளைகளும் சிங்களத்தை மூன்ருவது இஷ்டபாடமாகப்படிக்கலாமென்பது தமிழரசுக் கட்சியின் கொள்கைதானே.

ப: ஆம்,

கே: தமிழ்க் காங்கிரஸின் கொள்கையும் அதுதானே.

ப: ஆம்; அவர்களும் அப்படித்தான் சொல்கிருர்கள்.

கே: அப்படியானல் மொழிப்பிரச்னையில் தமிழ் அரசுக்கட்சிக்கும் தமிழ்க் காங்கிரசுக்கும் வித்தியாசமில்லையே.

ப: இருக்கிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி நிர்வாகமொழியாவதற்கு நாங்கள் தான் மூலகாரணம். அவர்கள் அதைச்செய்யவில்லை.

கே: தமிழ்க் காங்கிரஸ் அதை எதிர் கவில்லையே?

(தமிழ்க்காங்கிரஸ் ஒன்றையுமே எதிர்க்கவில்லை! என்று ஒரு ஆதரவாளர் குறுக்கிட்டுச் சொல்கிருர்)

ப: எதிர்க்கவில்லை. ஆனலும் தமிழ்மொழிச் சட்ட (விசேஷ) விதிகளை கொண்டு வருவதற்கு நாங்கள் தான் காரணம்.

கே: கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக இங்கு சமஷ்டி ஆட்சிகுஅமைப்பை ஏற்படுத்துவதற் தமிழரசுக்கட்சி எடுத்த முயற்சி எந்தஅளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறது. இன்னும் எத்தனை வருடங்களில் சமஷ்டி ஆட்சியை இங்குஏற்படுத்த முடியுமென கருதுகிறீர்கள்?

ப: குறிப்பிட்டுஒரு காலத்தைச் சொல்லமுடியாது. சிங்கள மக்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் சமஷ்டிக் கோரிக்கையை முற்றுமுழுதாகஏற்கவேண்டும். எங்கள ஆட்களே சிலர் இதைஎதிர்க்கிருர்களே!

ஏதமில் லாத வெற்றி
எமக்குற எழுக நீவிர்

பாரிலே தமிழன் முன்னுள்
பலத்துடன் நிமிர்ந்து பண்பின்
வேரிலே வெற்றி கண்டான்
வீணரின் மதியால் முன்னுட்
பேரறப் பெட்புப் போக
பிழைபுற வாழ லாமா?
சீருற மீண்டும் வெற்றித்
திடம்பெற ஒன்றுசேர்வீர்

தேசநலம் பேணி!

கோவை சி. எஸ். மணியன்

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 23-ம் திகதி [5-4-70]

சோதிடக்கலாநிதி திருமலை க, வேலுப்பிள்ளை

**மேஷம்**- நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது. நீண்டநாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியாகும். கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். சுபதினம்.

**ரிஷபம்**- வெளியிடத்து பயணம் வேதனையைத் தரலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. பெரியோர்களை பகைத்துக்கொள்ளாது பொறுமையை பேணி நடக்கவும்.

**மிதுனம்**- இதயம் இன்று இன்பத்தால் விம்மும். குடும்பத்தில் உறவுமுறைகள் மிகவும் அன்புகொண்டதாக இருக்கும். புத்திரர்களாலும் மதிப்பு உயருவதற்கு இடமுண்டு. சுமுகமானதினம்.

**கடகம்**- உல்லாசமாக பொழுதை போக்குவீர்கள். இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள்' பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரலாம். பொருள்வரவுக்கும் இடம் உண்டு.

**சிம்மம்**- அன்னியவாசம் அமைதிக்கு உலைவைக்கும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ளவேண்டும். தெய்வ நம்பிக்கை சிறந்த பயன்தரும்,

**கன்னி**- ஒளிமயமான சூழ்நிலை உருவாகும். வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவம் இடம்பெறும்.

**துலாம்**- செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும். நண்பர்களின் தொல்லைகளால் நஷ்டமடைமடைவீர்கள். தொழில்புரியும் இடத்தில் புதிய எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டிய நிலைமை ஏற்படலாம்.

**விருட்சிகம்**- அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும்: அறவழியில் ஆர்வம் பிறக்கும்' ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும். இலட்சியவாதிகளுக்கு இன்று பொன்னன தினம்.

**தனுசு**- இதயங்கள் இணைவதற்கு இன்று நல்லநாள், அபிப்பிராயபேதங்கள் மறையும். பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். பந்துக்கள் ஆதரவு பெருகும். குடும்பத்தில்அமைதிநிலவும்,

**மகரம்**- இளமை நினைவுகள் நிழலாட்டம்போடும். காதல்கணை தாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பாலுணர்ச்சி மேலிடும்.

**கும்பம்**- எண்ணங்கள் ஆயிரம் சிந்தனையிலே வந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும். விந்தையானபோக்கு வேடிக்கைகாட்டும்.

**மீனம்**- பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது. அவசரமுடிவின் மூலம் விரோதத்தை தேடிக்கொள்ளுவீர்கள். துதிபாடிக் கொண்டே சிலர் துரோகச்செயலில் ஈடுபடுவார்கள்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org